விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 07 திங்கட்கிழமை (22.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

## மகிந்தவின் விஞ்ஞாபனம் வெளியிடுவதில் தாமதம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படுவது திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று வெளியிடப்படவிருந்தது.

இந் நிலையில், ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில் அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தேர்தலுக்கு 12 நாட்களுக்கு முன்னர் அதாவது எதிர்வரும் 25 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட உள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் விஞ்ஞாப்னம் வெளியிடுவது ஏன் ஒத்திவைக்கப்பட்டது என அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவரிடம் வினவிய போது, அச்சிடும் பிரச்சினையே இதற்கு காரணம் என தெரிவித்ததுடன் ஏனைய எதனையும்

23ஆம் பக்கம் பார்க்க....

## சூடுபிடிக்கும் பிரசாரம் தடுமாறும் ஆதரவுகள் !

### தேர்தல் குறித்து ராவய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்காளர்களிடம் வேட்பாளர்களின் நடத்தை குறித்து மேற்கொள்ளப்பட்ட சில கருத்து கணிப்புக்களில் பொது வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு இருக்கும் மக்களின் வரவேற்பு சடுதியாக அதிகரித்து வருவதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான வரவேற்பு குறைந்து வருகிறது என நேற்று வெளியாகியுள்ள ராவய பத்திரிகை தனது பிரதான தலைப்புச் செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் பொது வேட்பாளருக்கு சாதகமான நிலைமை பிரதான நகர் புறங்களிலும் ஏனைய நகர பகுதிகளில் மாத்திரமே காணப்பட்டது. கிராம புறங்களில் ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கில் சூடுபிடிக்கும் தேர்தல் பிரசாரம் !

## வெவ்வேறு தினங்களில் யாழ்.வரும் வேட்பாளர்கள்




(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்திருக்கும் இத்தருணத்தில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபாலா சிறிசேன, அரச தரப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வடக்கில் தீவிர பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## அம்பாந்தோட்டையின் அபிவிருத்தி சீனாவிடம் பணிகள் ஒப்படைப்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் 16 மில்லியன் டொலர் பெறுமதியான மற்றொரு அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ளும் பணிகளை சீனாவிடம் அரசாங்கம் ஒப்படைத்துள்ளது.

இதன்படி அம்பாந்தோட்டையில் ஒருங்கிணைந்த பேருந்து மற்றும் தொடருந்து மையத்தை அமைக்கும் பணிகளை அரசாங்கம் சீனாவிடம் ஒப்படைத்துள்ளது.

இலங்கை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.விசாரணை அறிக்கை மார்ச்சில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அறிக்கை எதிர் வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 28-வது கூட்டத் தொடர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள இந்தக் கூட்டத்தொடர் தொடர்பிலான உத்தேச நிரலிலேயே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்

23ஆம் பக்கம் பார்க்க....

## இரணைமடு குளத்தின் நீர்மட்டம் உயர்வு

(சிவநகர்)

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் 30 அடி 8 அங்குலத்தினை எட்டியுள்ளதால் எந்த நேரத்திலும் அதன் வான்கதவுகள் திறக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் கன மழை பெய்து நீர்மட்டம் உயருமானால் 5 வான் கதவுகள் 6 அங்குலத்துக்கு இன்று காலை 8 மணியளவில் திறந்து விடப்படும் என கிளிநொச்சி மாவட்ட நீர்பாசன திணைக்கள அதிகாரி எஸ்.விகிர்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் காலை கிளிநொச்சியில் கன மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இரணைமடு நீர் மட்டம் குறித்துமக்களை விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

(எ-254)

## தேர்தலில் யாரை ஆதரிப்பது கூட்டமைப்பு அறிவிக்கும் !

### மாவை. எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அறிக்கை ஒன்றை தயாரித்து வருவதாகவும், இதனடிப்படையில் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து அறிவிக்கப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவ

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தாவல்கள் இடம்பெறும்?

ஜனாதிபதித் தேர்தலுக்கான இறுதி வாரத்தில் ஆளும் தரப்பிலிருந்தும், எதிர்த்தரப்பிலிருந்தும் மேலும் பல கட்சித் தாவல்கள் நடைபெறலாம் என ஊகம் தெரிவித்தனர் அரசியல் அவதானிகள்.

ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் இது தொடர்பில் இரு புறமும் உள்ள முக்கிய புள்ளிகளுடன் தொடர்ந்தும் இரகசியமாகக் கலந்துரையாடி வருவதாகவும் அவற்றின் பிரதிபலன்களை தேர்தலுக்கான இறுதி வாரத்தில காணமுடியுமெனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆளும் கட்சியினர் எதிரணியிலிருந்து கவர்ந்திழுக்க முயற்சிக்கும் முக்கிய புள்ளிகளில் மேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளடங்குவதாகவும், அவ்வாறே எதிரணியினர் உள்வாங்க முயற்சிக்கும் முக்கியஸ்தர்களின் மேல் மாகாண சபையின் முக்கிய ஆளும் கட்சி உறுப்பினர் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது. (எ-11)

# மக்கள் சக்தியை விடவும் பெரிய சக்தி எதுவுமில்லை

## ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் சக்தியை விடவும் பெரிய சக்தி எதுவும் கிடையாது என ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உடுநுவர பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச அதிகாரம், பண பலம், குண்டர் கூட்டங்களின் அதிகாரம் போன்றவற்றைப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

எனினும், இந்த அனைத்து சக்திகளை விடவும் மக்கள் சக்தி வலுவானது என்பது எதிர்வரும் ஜனவரி மாதம் 8-ம் திகதி வெளிச்சமாகிவிடும்.

தற்போதைய அரசாங்கம் மாநாயக்க தேரர்கள், அரச அதிகாரிகள், அமைச்சர்கள் கூறும் அறிவுரைகளுக்கு செவி சாய்ப்பதில்லை.

வீட்டில் உள்ள சிறிய இளவரசர் கண்டியில் கார் பந்தயம் வைக்க வேண்டுமென தந்தையிடம் கோரியவுடன், மாநாயக்க தேரர்களின் கோரிக்கைக்கு செவி சாய்க்காது கண்டியில் கார் பந்தயங்கள் நடத்தப்படுகின்றன.

வடக்கு ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு அனைவரும் வரவேற்பை வெளியிட்டனர்.

ஆரம்பத்தில் ஒரு கிலோ மீற்றர் அமைப்பதற்கு 44 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டது. இதனை அமைச்சர் டலஸ் அழகப்பெரும முன்மொழிந்திருந்தார்.

எனினும் திட்டத்திலிருந்து அமைச்சர் அழகப்பெருமவை நீக்கி புதிய திட்டமொன்று உருவாக்கப்பட்டது. அதற்கு அமைய ஒரு கிலோ மீற்றர் அமைக்க 340 மில்லியன் ரூபாய் செலவாகும் என அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு தரகுப் பணம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. சட்டம் நிலைநாட்டப்படும் என கூறும் அரசாங்கம் வீதி ஓரங்களில் பாரியளவில் கட் அவுட்களை வைத்துள்ளது.

இப்படி கட்அவுட் வைப்பது சட்டத்தை பாதுகாப்பதாக அமையுமா என மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
ம.நிஷாமளா அவர்களது அன்புத் தந்தை
திரு.
**சின்னக்குட்டி மகாலிங்கம்**
அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்துக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8830)

அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி. ஆசிரியர் நலன்புரிக் கழகம்

# வடக்கு ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

வடக்குக்கான ரயில் பாதையில் வெள்ளம் தேங்கியிருப்பதால் கொழும்புக்கான ரயில் சேவைகள் அனைத்தும் வடக்கில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உட்பட்ட பிரதான ரயில் நிலையங்களில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் காலை நேர சேவைகள் அனைத்தும் அனுராதபுரம் நிலையம் வரையே சேவையில் ஈடுபட்டன. அங்கிருந்து கொழும்பு செல்வதற்கான பஸ் சேவை ஒழுங்குகளை ரயில் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

எனினும் இரவு கொழும்புக்குச் செல்லும் இரவுத் தபால் சேவை ரயில் மற்றும் மதிய சேவைக்கான கடுகதி ரயில் சேவை என்பன தற்காலிகமாக நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வடக்குக்கான ரயில் பாதையில் தலாவ மற்றும் தம்புத்தேகமவுக்கு இடையில் தண்டவாளம் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் பாதுகாப்பான ரயில் சேவையை மேற்கொள்ள முடியாத நிலையில் கொழும்புக்கான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பில் இருந்து வடக்குக்கான ரயில் சேவைகள் அனைத்தும் மஹோ வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை கல்கமுவ வரையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விடுமுறை காலத்தை முன்னிட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக கண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் விசேட ரயில் சேவை இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரயில் சேவை தடைப்பட்டமையால் தபால் சேவையும் பாதிக்கப்பட்டது. தபால் ரயில் சேவையில் ஈடுபடாதமையால் நேற்று முன்தினம் வடக்குக்கான தபால்கள் வரவில்லை. வெளியூர் தபால் சேவையிலும் பாதிப்பு ஏற்பட்டது. (எ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 20.12.2014 ஆம் திகதியிலிருந்து 25.12.2014 ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

- தலைமை அலுவலகம் - கருவப்புலம் லேன் கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம் - பிறவுண் வீதி கொக்குவில்.
- பொது நூலகம் கோண்டாவில். - ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- பொது நூலகம் கொக்குவில். - பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் நல்லூர். - கலாசாலை வீதி, திருநெல்வேலி.

ப.வசந்தகுமார்.
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை (சி-9450)

# தேர்தல் வன்முறை 350 ஆக அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 350 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 30 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை குறித்து 320 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் கூறியுள்ளது.

இவற்றில் கொழுமபு மாவட்டத்தில் அதிகமாக 54 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் 26 முறைப்பாடுகளும் கண்டி மாவட்டத்தில் 20 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

அரச சொத்துக்களை அநாவசியமாக பயன்படுத்துதல், அரசாங்க அதிகாரிகளை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பதவி மாற்றம் மற்றும் பதவி உயர்வு, சட்டத்தை மீறி தேர்தல் காரியாலயங்கள் ஆரம்பித்தல் போன்ற அனைத்து காரியங்கள் குறித்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளது. (எ-11)




மொறாயஸ்

ஸ்தாபிதம் (1962) 50 வருடகால சேவையில் மொறாயஸ். உங்கள் முக அமைப்புக்கு ஏற்ப மூக்குக்கண்ணாடிகளை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம் மொறாயஸ். 50 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். பழைய வெலிங்டன் தியேட்டர் முன்பாக (லிங்கம் கூல்பார் சந்தி) நத்தார் புது வருடத்தை முன்னிட்டு இரண்டு பார்வை கண்ணாடி (Golde Frame) இல் மிகவும் குறைந்த விலையில் ரூபாய் 850 மட்டுமே.

(C-9449)

தொலைபேசி இல: 021 221 7514


## மார்கழி மாத திருவாசக முற்றோதல்

புலோலி மத்தி மாதர் அபிவிருத்திச் சங்கமும், கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் மார்கழி மாத திருவாசக முற்றோதலின் விபரம்

| திகதி | ஆலயம் / கோவில் |
|---|---|
| 23.12.2014 | முருகன், மாலந்தெணி. |
| 24.12.2014 | முருகன், (விறுமர்) மாயக்கை. |
| 25.12.2014 | கண்ணகை அம்மன், தம்பசிட்டி. |
| 26.12.2014 | வீரபத்திரர், வாணர்குடியிருப்பு. |
| 27.12.2014 | தெணி அம்மன், திருநாவலூர். |
| 28.12.2014 | அம்மன், சொக்கன் கலட்டி. |
| 29.12.2014 | பிள்ளையார், சக்கோட்டை. |
| 30.12.2014 | பிள்ளையார், மாயக்கை. |
| 31.12.2014 | முதலியவள், ஆத்தியடி. |
| 01.01.2015 | அம்மன், பண்டாரி. |
| 02.01.2015 | ஞானவைரவர், தம்பசிட்டி. |
| 03.01.2015 | கண்ணகை, மந்திகை. |
| 04.01.2015 | பிள்ளையார், ஆத்தியடி. |
| 05.01.2015 | காளி கோவில், பழவத்தை. |
| 06.01.2015 | வைரவர் கோவில், வத்தனை. |
| 07.01.2015 | வீரபத்திரர், வியாபாரிமூலை. |
| 08.01.2015 | பிள்ளையார், முடிக்கொற்றாவத்தை. |
| 09.01.2015 | பிள்ளையார், சின்னத்தாய். |
| 10.01.2015 | சிவனாலயம், மூச்சம்பலம். |
| 11.01.2015 | வீரபத்திரர், சாரையடி. |
| 12.01.2015 | பிள்ளையார், குழழடி. |
| 13.01.2015 | வீரபத்திரர், காந்தியூர். |
| 14.01.2015 | ஆலடிப்பிள்ளையார் (பூர்த்திவிழா) |

*திருவாசக விரும்பிகளை இம்முற்றோதலில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.*

த.தமிழரசி
தலைவர் மாதர் அபிவிருத்திச் சங்கம்

புலோலி மத்தி
(8831)

# 15-வது ஆண்டு நினைவலைகள்



## அப்பாக்குட்டி இராசையா

அன்பும் நற்பண்பும் ஆளுமை விருத்தியும்
இன்புறப் பக்தியால் இறைவனை மேவி
தன் மனைவிக்கு கணவராய் உறவினர்க்கு நல்
உறவாய் - ஊர் போற்றும் உத்தமராய்
கோண்டாவிலூர் கண்டபட நின்றீர்....
ஐயோ....!
காலனவன் அழைத்தானே
எமை கதி கலங்கவிட்டு சென்றீர் ஐயா...!
மூஐந்து ஆண்டு ஆன போதும் மாமா
உம் நினைவு எமை விட்டு போகவில்லை
தாத்தா...!
ஆண்டவன் உமை எதற்கழைத்தான்...?
உம் பேரர் நாம் தரணியில் - செய்யும்
சாகசத்தை பார்த்து மகிழ்வதை தடுப்பதற்கா...?
அன்பு மொழி பேசும் உம்பூட்டக்
குழந்தைகளின் வித்தைகளை வினோதம் பார்க்க
விட்டு வைக்கவில்லையே...!
அன்புத் தாத்தாவே நீர் சென்ற
அளக்க முடியாத தூரத்தை விழிமேலே
விழி வைத்து உம் வருகைக்காய்
காத்திருக்கின்றோம்...!

தோற்றம் 27.07.1922
மறைவு 22.12.1999

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி,தங்கை, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

கோண்டாவில்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி ரெக்ஸ் வழங்கும் விசேட விலைக் கழிவுகள்



எதிர்வரும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சகல விதமான புடைவை வகைகளுக்கும் விசேட விலைக் கழிவுகள். 10%-25% வரை ஒவ்வொரு பொருட்களுக்கும் உண்டு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
தரமான தெரிவுகளுக்கு முந்துங்கள்.

இச் சலுகைகள் 31/12/2014 வரை மட்டுமே

வாணி ரெக்ஸ்
இல.81 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 021 222 5578,
021 222 9286


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



Loving Memory
of
**Dr.Maricileenpillai Mariathasan(JP)**
Medical Officer of Health (2001-2011)
Municipal Council, Jaffna.
(12.07.1942-22.12.2011)

*Appa*
*The Beauty Of Your Smile-Still*
*Brightens up our day*
*The kindness and compassion- which*
*Filled your heart*
*Inspired us*
*you are in our hearts*
*you walk Beside us.*
*unseen-unheard*
*But always near*

Fondly Remembered by
Wife, Children and Relatives

AVE MARIA
72,Temple Road,
Chundukkuli,
Jaffna

**வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன் (J.P)**
**(பேரின்பம்)**
**சுகாதார வைத்திய அதிகாரி (2001-2011)**
**யாழ். மாநகர சபை**
**(சமாதான நீதவான்)**

# இராசி பலன்

22.12.2014
(மார்கழி 07, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
அமாவாசை காலை 7.57 மணிவரை
பிரதமை பின்னிரவு 6.23 மணிவரை
மூலம் முன்னிரவு 8.50 மணிவரை
இராகுகாலம் 7.55-9.25 மணிவரை
சுபநேரம் 12.25-01.55 மணிவரை

வளவன்

**மேடம்** – மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்** – சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களால் அலைச்சல்களும், சோர்வும் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** – நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்,போசன சுகமுண்டு.

**கடகம்** – பகை விலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள் முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** – எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சொத்துக்களால் ஆதாய முண்டு.

**கன்னி** – குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர்,விருந்தினர்களின் வருகையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** – பாராட்டும், புகழும் கூடும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், இளைய சகோதரத்தின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** – விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது. செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கும்பம்** – எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வருமானத்தை பெருக்கிக் கொள்ள தகுந்த நட வடிக்கை எடுப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சமயோகிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள்.

**மீனம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் S&P SL 20 விலைச்சுட்டியில் மாற்றம்

2014ஆம் ஆண்டு S&P டவ் ஜோன்ஸ் விலைச்சுட்டிகளினால், S&P SL 20 விலைச்சுட்டியில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த மீளாய்வினை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அறிவித்துள்ளது.

ஏசியன் ஹோட்டல்ஸ் & புரொபடீஸ் PLC (CSE ரிக்கர்: AHPL, புளும்பர்க் ரிக்கர்: AHPL SL), C T ஹோல்டிங்ஸ் PLC (CSE ரிக்கர்: CTHR புளும்பர்க் ரிக்கர்: CTHR SL), மற்றும் ஹேய்லீஸ் PLC (CSE ரிக்கர்: HAYL, புளும்பர்க் ரிக்கர்: HAYL SL) ஆகிய கம்பனிகள் சுட்டி உள்ளடக்கத்திற்கான தகைமையினை கொண்டிராமையினால் 2014 டிசம்பர் 22-ம் திகதி அமுலாகும் வகையில் (2014 டிசம்பர் 19-ம் திகதி சந்தை நிறைவடைந்த பின்னர்) S&P SL 20 விலைச்சுட்டியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக S&P டவ் ஜோன்ஸ் விலைச்சுட்டிகள் அறிவித்துள்ளது.

இதற்கு பதிலாக அக்செஸ் என்ஜினியரிங் PLC (CSE ரிக்கர்: AEL, புளும்பர்க் ரிக்கர்: AEL SL ) பியுபில்ஸ் லீசிங் & பைனான்ஸ் PLC (CSE ரிக்கர்: PLC, புளும்பர்க் ரிக்கர்:PLC SL) மற்றும் சிறிலங்கா ரெலிகொம் PLC (CSE ரிக்கர்:SLT, புளும்பர் ரிக்கர்: SLT SL) போன்ற கமபனிகள் உள்ளடக்கப்படுகின்றன.

மொத்த சந்தை மூலதனவாக்கம், திரவத்தன்மை மற்றும் நிதி இயலுமை ஆகியவற்றைக் கொண்ட பாரிய இருபது பங்குகளை இந்த விலைச்சுட்டி உள்ளடக்குகின்றது.

குறித்த ஒருபங்கின் சந்தை மூலதனவாக்கம் 15% க்கு ஏற்ப தனியொரு பங்கின் ஆதிக்கத்தினைக் குறைக்கும் வகையில் விலைச்சுட்டி உள்ளடக்கமானது மிதக்கும் சீராக்கிய சந்தை மூலதனவாக்கத்தினால் நிறையளிக்கப்படுகின்றது.

S&P SL 20 விலைச்சுட்டியானது சர்வதேச வழக்கங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

S&P டவ் ஜோன்ஸ் விலைச்சுட்டிகள் மற்றும் MCSI ஆகியவை இணைந்து உருவாக்கிய உலகளாவிய துறை வகைப்படுத்தல் நியமத்திற்கேற்ப (GICS) அனைத்து பங்குகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு இது உலகளாவிய ரீதியில் சந்தைப் பங்குபற்றுநர்களால் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது.

### S&P சிறிலங்கா 20 விலைச்சுட்டியிலுள்ள கம்பனிகள்

1. அக்செஸ் என்ஜினியரிங்
2. எயிட்கன் ஸ்பென்ஸ்
3. புக்கிட் தாரா
4. கார்கீல்ஸ் (சிலோன்)
5. கார்ஸன் கும்பர்பெட்ச்
6. சிலோன் டுபாகோ
7. சேவ்ரொன் லுப்ரிகன்ட்ஸ் லங்கா
8. கொமர்ஷல் வங்கி சிலோன்
9. DFCC வங்கி
10. டயலொக் அக்சியாடா
11. டிஸ்டிலரிஸ் கம்பனி ஒப் சிறிலங்கா
12. ஹட்டன் நஷனல் வங்கி
13. ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்
14. லங்கா ஓரிக்ஸ் லீசிங் கம்பனி
15. த லயன் புருவெரி சிலோன்
16. தேசிய அபிவிருத்தி வங்கி
17. நெஸ்ட்லே லங்கா
18. பியுபில்ஸ் லீசிங் பைனான்ஸ்
19. சம்பத் வங்கி
20. சிறிலங்கா ரெலிகொம்

# வாடிக்கையாளருக்கு சிறப்பு-எடிசலாட்

etisalat

நாடு முழுவதும் 100 நாட்களில் மேலும் 200 வலையமைப்பு நிலையங்கள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் சிறந்த சேவையை அனுபவிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், எடிசலாட் லங்கா எதிர்வரும் 100 நாட்களில் 200 வலையமைப்பு நிலையங்களை அமைக்க முன்வந்துள்ளது.

தனது வலையமைப்பு கொள்ளளவு விஸ்தரிப்பு திட்டத்துக்கமைய இந்த நிலையங்களை அமைக்க எடிசலாட் முன்வந்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து சீறந்த சேவைகளை வழங்கும் வகையில் தன்னை அர்ப்பணித்துள்ளமைக்கான மற்றுமொரு எடுத்துக்காட்டாக இந்த விஸ்தரிப்பு நடவடிக்கை அமைந்துள்ளது.

நாடு முழுவதும் வலையமைப்பை மேலும் உறுதி செய்யும் வகையில் அமையும் என்பது டன் வலையமைப்பு உட்கட்டமைப்பு விஸ்தரிப்பு செயற்பாடுகளுக்கமையவும் அமைந்துள்ளது. புதிதாக அமையவுள்ள வலையமைப்பு நிலையங்களில் 2G மற்றும் 3G கோபுரங்கள் போன்றன நாட்டின் 8 மாவட்டங்களில் அமையவுள்ளன.

தொடர்ச்சியான சேவை மேம்பாட்டுக்காக எடிசலாட் லங்கா காண்பிக்கும் முதலீடுகளுக்கமைய, தற்போதை திட்டம் 2015 ஜனவரி 31-ம் திகதியளவில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விஸ்தரிப்பு தொடர்பில் எடிசலாட் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வெய்ல் சல்மான் கருத்து தெரிவிக்கையில்,

நாடு முழுவதும் சிறந்த சேவைத தரத்தை அனுபவிக்கக்கூடிய வாய்ப்பை வழங்குவதன் மூல மாக, வாடிக்கையாளர்களுக்கு Dual Carrier HSPA+ தொழில்நுட்பத்துடன் கூடிய 3.75G வேகத்திலான சேவையை அனுபவிக்க முடியும்.

42 mbps டேடா வேகம் மற்றும் வேகமான டேடா வலையமைப்பு ஆகியவற்றின் மூலம் நாடு முழுவதும் எல்லைகளற்ற இணைப்பு அனுபவத்தை எடிசலாட் வழங்கி வருகிறது. இந்த புதிய விஸ்தரிப்பு செயற்திட்டமானது, நிறுவனத்தின் சேவை மேம்படுத்தல் திட்டத்துக்கமைய அமைந்துள்ளது.

2015இல் எடிசலாட் லங்கா வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த நிலையை எய்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும்.

# கொமர்ஷல் வங்கியின் அறிக்கையே சிறந்தது!



கொமர்ஷல் வங்கியின் 2013-ம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்திடமிருந்து (*SAFA*) இரண்டு முக்கிய விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த முறையில் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகளுக்கான விருது வழங்கும் விழாவின் போதே இந்த விருதுகள் கிடைத்துள்ளன.

வங்கியின் நிதி அறிக்கையிடல் தரத்தை மீள உறுதிசெய்யும்வகையில இந்த விருதுகள் அமைந்துள்ளன.

இலங்கையின் தனிச் சிறப்பு மிக்க தனியார் வங்கி -தனியார் வங்கிப் பிரிவில்- வெற்றிவாகை சூடியுள்ளதோடு, கூட்டாண்மை ஆளுகை வெளிப்பாடுகளுக்கான சார்க் வலய விருது வழங்கலில் 2-ம இடத்தையும் பிடித்துள்ளது.

இந்த கீர்த்திமிக்க விருது வழங்கும் விழா இந்தியாவின் புவனேஷ்வர் நகரில் டிசம்பர் மாத முற்பகுதியில் இடம்பெற்ற SAFA வின் 37-வது ஆளுனர் சபைக் கூட்டத் தொடரின் ஒரு அங்கமாக இடம்பெற்றது.

தெற்காசியப் பிராந்தியத்தில் 2-ம் மற்றும் 3-ம் இடங்களை முறையே பாகிஸ் தானின் வரையறுக்கப்பட்ட MCB வங்கியும், பங்களாதேஷின் வரையறுக்கப்பட்ட பிரைம் வங்கியும் பெற்றுக் கொண்டன.

பல்வேறு வகைப்படுத்தலின் கீழ் SAFA விருதுகள் வருடாந்தம் வழங்கப்படுகின்றன. தெற்காசியாவில் இருந்து சமர்ப்பிக்கப்படும் அனைத்து வருடாந்த அறிக்கைகளும் உள்வாங்கப்பட்டு அவற்றின் வெளிப்படைத்தன்மை முன்னேற்றம், பொறுப்புக்கூறல், ஆளுகை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அவற்றை உரிய முறையில் மதிப்பீடுசெய்து இந்த விருதுகளுக்கான தெரிவுகளை தெற்காசிய கணக்காளர் சம்மேளனக் குழு மேற்கொள்கி ன்றது.

கொமர்ஷல் வங்கி தொடர்ச்சியாக பல வருடங்களாக இந்த விழாவில் விருதுகளை வென்று வருகின்றது. நிதி அறிக்கையிடலில் இந்தப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த ஒரு நிறுவனமாக தன்னை நிலை நிறுத்தியுள்ளது என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம்.

வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனம் தயாரிக்கின்ற மிக முக்கியமானதோர் ஆவணமாக அதன் வருடாந்த அறிக்கை அமைந்துள்ளது.

எல்லோருக்கும் எதிர்காலம் பற்றிய கனவுகள் உள்ளன. ஆனால சிலவேளை எம் முன்னே உள்ள பயணத்தில் நாம் இலக்கு வைத்துள்ள இலக்குகளை விட சவால்கள் அதிகமாகக் காணப்படலாம்.

இது எமது அபிலாஷைகளை கனவு இராஜ்ஜியத்துக்குள்ளேயே வைத்திருக்கும். ஆனால் எமது பயணத்தில் சரியான பங்காளி அமைந்தால் அந்தப் பயணம் மிக இலகுவானதாக மாறிவிடும் என்று வங்கியின் வருடாந்த அறிக்கையின் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிங்கர்-சொனி இணைந்து புதிய தெரிவுகள் அறிமுகம்

நுகர்வோர் பாவனைப் பொருட்களை வழங்கும் நாட்டின் முன்னணி வர்த்தக நாமமான சிங்கர் (சிறிலங்கா) பிஎல்சி நிறுவனமானது, இலங்கையில் முதற்தடவையாக ஜப்பானின் மின்னணு ஜாம்பவானான SONY இன் வாடிக்கையாளர் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி தெரிவுகளை அறிமுகம் செய்துள்ளது.

இந்த பங்காண்மையின் ஊடாக, சிங்கர் சிறிலங்கா நிறுவனமானது SONY இன் வாடிக்கையாளர் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி வரிசைகளில் உள்ள சாதனங்களை அதன் சில்லறை வலையமைப்பு, உற்பத்தி விநியோகம், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

400 சில்லறை காட்சியறைகள், 8 பிராந்திய சேவை நிலையங்கள் மற்றும் 150க்கும் சேவை காட்சியறைகளில் சிங்கரின் விற்பனைக்கு பின்னரான சேவையை நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என சிங்கர்(சிறிலங்கா) பிஎல்சி இன் சந்தைப் படுத்தல் மற்றும் வர்த்தக பணிப்பாளர் மஹேஷ் விஜயவர்தன தெரிவித்தார்.

# டிஎப்சிசி வங்கியின் மணி ட்ரான்ஸ்பர் விஸ்தரிப்பு

DFCC வர்தன வங்கி தனது லங்கா மணி ட்ரான்ஸ்பர் (*LMT*) வலையமைப்பை 5 நாடுகளில் 275க்கு மேற்பட்ட இடங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது.

இந்த விரிவாக்கத்திற்கான வசதியைப் பெறுவதற்காக மத்திய கிழக்கிலுள்ள 2 பெரிய பணப் பரிவர்த்தனை நிலையங்களுடன் ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

புதிதாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டின் பயனாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், ஓமான், குவைத், பஹறெயின் ஆகிய நாடுகளில் தொழில்புரியும் இலங்கையர் தமது வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகப் பணத்தை அனுப்ப முடியும்.

தற்சமயம் இலங்கையிலுள்ள 700க்கு மேற்பட்ட பங்காளி நிலையங்களின் ஊடாக பண அனுப்பீட்டுச் சேவை வழங்கப்படுகின்றது.

**DFCC வர்தன வங்கி பற்றி...**

DFCC வர்தன வங்கி நாட்டின் பல பகுதிகளிலும் 137 கிளைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் 60 தபால் அலுவலகப் பிரிவுகளும் உள்ளடங்கும். வங்கியின்சகல கிளைகளிலும் வாடிக்கையாளர்கள் முழு அளவிலான வர்த்தக மற்றும் தனிப்பட்ட வங்கிச் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

உலகிலுள்ள மிகப் பழமை வாய்ந்த அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றான DFCC வங்கி, 1955 -ம் ஆண்டு பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் நிறுவப்பட்டது. DFCC குழுமம் இன்று ரூ.151 பில்லியனுக்கு மேற்பட்ட மொத்தச் சொத்து அடித்தளத்தைக் கொண்டுள்ளது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,236.37 | 7,252.60 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,075.14 | 4,062.79 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) 4,216,955

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** எஸ்.எம்.பி.லீசிங்(X)(0.50), லங்கா செரமிக் (122.00), கூஜே(66.40), புளு டைமண்ட்(X)(0.90), ரீசிமோல் ஹோல்டர்(44.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** மல்வத்தை(X)(4.00), பரஹன்(551.20), நுவரெலிய(1531.10), புளு டைமண்ட்(1.80), சம்சன் இன்ரநெற்(90.00)

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.43 | 133.32 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.60 | 209.43 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.30 | 164.54 |
| சுவிஸ் பிராங் | 132.20 | 136.97 |
| கனேடிய டொலர் | 112.06 | 115.81 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.86 | 109.91 |
| சிங்கப்பூர் டொலர் | 98.81 | 102.02 |
| ஜப்பான் யென் | 1.09 | 1.12 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.07 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.66 | |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிக்கு எந்தத்தரப்பும் ஆதரவை வழங்கவில்லை

## எஸ்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எந்த தரப்பும் தமது உச்சபட்ச ஆதரவை வழங்கவில்லை என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி உடநுவர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

பொது வேட்பாளருக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சி வேலை செய்வதி ல்லை. ஜே.வி.பி அவருக்கு ஆதரவாக எதனையுமே செய்வதில்லை.

ஓரமாக இருந்து ஆதரவை வழங்கி வருகிறது. ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்து சென்றவர்களில் இரண்டு பேரை தவிர ஏனைய அனைவரும் அரசாங்கத்திற்கு திரும்பினர்.

கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக தேர்தல் பணியாற்றியது.

இம்முறை அந்த கட்சியினரும் பொது வேட்பாளருக்காக தேர்தல் பணிகளை செய்வதில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பு நடுநிலைமை வகிக்கின்றது. கடந்த முறை முஸ்லிம் காங்கிரஸ் பொது வேட்பாளருக்கு கடுமையாக உழைத்தது.

இம்முறை அவர்களும் இல்லை. இதனால், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக சந்திரிகா மாத்திரமே இருக்கின்றார்.



இதனால், பொன்சேகாவை விட மைத்திரிபால படுதோல்வியடைய நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)



வர்ணகுலசிங்கம் வர்ணராமேஸ்வரி இசைத்துறை மாணவர்களுக்கான பயிற்சி பயிலரங்குநேற்றுமுன் தினம் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மண்டபத்தில் இசைத்துறைத் தலைவர் தர்ஷனன் தலைமை யில் இடம் பெற்ற போது....

## சந்திரிகாவுக்கு எதிரான கருத்து எஸ்.பி.பதவி விலக வேண்டும்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு எதிராக சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டமை தொடர்பில, அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உடனடியாக பதவி விலக வேண்டும் என, இலங்கை புத்திஜீவிகள்குழுக்களில்ஒன்றானதப்ரைடே போரம்(The Friday Forum) தெரிவித்துள்ளது.

"சந்திரிகா என்பவர் கீழே தள்ளி மிதித்து, வீதியில் ஓட வைக்கப்பட வேண்டியவர்" என எஸ்.பி.திஸாநாயக்க அண்மையில் குறிப பிட்டிருந்தார். இதற்கு எதிர்க்கட்சி கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் போன்றன தமது எதிர்ப்பை வெளியிட்டன.

இந்தநிலையில் அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பரிசீலனை செய்யுமாறு த ப்ரைடே போரம் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-5)

## இலங்கைவாழ் தமிழர்கள் கௌரவமாகயிருக்க வேண்டும்

இலங்கை முதல் உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் கௌரவமாக இருக்க வேண்டும் என இந்திய பா.ஜ.கட்சியின் தேசியத் தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த மறைமலை நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற பாஜக பொதுக் கூட்டத்தில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை முதல் உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் கௌரவமாக இருக்க வேண்டும். தமிழ், தமிழர், தமிழகத்தின் கௌரவம் காக்கப்பட வேண்டுமானால் தமிழகத்தில் பாஜக ஆட்சி அமைய வேண்டும் என்று அமித்ஷா இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் தமிழில் பேச முடியாததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்ட அவர் தான் தமிழ் கற்றுக்கொண்டிருப்பதாகவும் விரைவில் தமிழில் பேசுவேன் எனவும் சுட்டிக்காட்டினார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 33 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ சுவிஸ் PR<br>தொ.இ: B/3604 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 19 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2797 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 49 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில் BSC/நோர்வே PR<br>தொ.இ: B/3605 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 21 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2799 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 23 சூரி,செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: B/3608 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: தாதி உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: கொழும்பில் வேலை செய்பவர் மட்டும்<br>தொ.இ: G/3601 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா: 22 1/2 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: BSC/ சொந்த தொழில்<br>தொ.இ: B/3609 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 50 1/4 செவ் 8 இல்<br>உயரம்: 158cm<br>தொ.இ: G/3602 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## நாட்டில் இழிவான அரசியலை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

நாட்டில் அமுலில் இருக்கும் தேர்தல் முறையில் மாற்றங்களை செய்து இழிவான அரசியலை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் எதிர்காலத்தில் சிறந்த அரசியல் சூழல் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்

கண்டி உடநுவர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த தேர்தல் முறை காரணமாக நாட்டின் அரசியலுக்கு இழிவானதும் வெட்கமானதுமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை மாற்ற விரும்பாம என்று நாங்கள் மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டோம். அதனை மாற்ற அவர் இணங்கினார்.

அரசியல்வாதிகள் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் கலாசாரம் கொண்டு வரப்பட வேண்டும். மக்களுக்கு வாக்குறுதி ஒன்றை வழங்கினால். அதனை வெளிப்படைதன்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் அரசியல் இப்படியானதாகவே இருக்கின்றது. இலங்கையை அந்த இடத்திற்கு கொண்டு செல்லவில்லை என்றால் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறாது எனவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (இ-5)

## 1115 வாக்கெண்ணும் நிலையங்களில் 300க்கு மாத்திரமே கண்காணிப்பாளர்கள்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பின் போது மொத்தமுள்ள 1115 வாக்கு எண்ணும் நிலையங்களில் 300 நிலையங்களுக்கு மாத்திரமே கண்காணிப்பாளர்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம், கடந்த வெள்ளிக்கிழமையன்று தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 300 நிலையங்களிலும் 7 கண்காணிப்பு அமைப்புக்கள் பகிர்ந்த நிலையில் செயற்படவுள்ளன. அஞ்சல் வாக்களிப்பு நிலையங்களை பொறுத்தவரையில் 304 நிலையங்களில் 70 நிலையங்களுக்கு கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெறவுள்ள அஞ்சல் வாக்களிப்புக்களின் போது மொத்தம் 5இலட்சத்து 41 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை அஞ்சல் வாக்களிப் பின் போது சுமார் 4ஆயிரம் கண்காணிப்பாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்று பவ்ரல் மற்றும் கபே அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## குண்டு வெடித்ததில் 3 பேர் உயிரிழப்பு

மணிப்பூர் மாநிலத்தில் வெடிகுண்டு வெடித்ததில் 3 பேர் உயிரிழந்தனர்.

மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் நேற்று சக்திவாய்ந்த கண்ணிவெடிகுண்டு வெடித்ததில் 3 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 4 பேர படுகாயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு

**பலர் படுகாயம்**

அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வீதியோரத்தில் வைக்கப்பட்டு இருந்த வெடிகுண்டு வெடித்துள்ளது என்று பொலிஸ் தரப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதி பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். திருநெல்வேலியில் இளைஞர் குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியில் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு அருகிலுள்ள வீடுகளின் மீது நேற்று முன்தினம் இரவு கற்களை எறிந்தும் கதவுகளை காலால் உதைத்தும் இளைஞர் குழுவொன்று அட்டகாசம் செய்ததாக அப்பகுதி மக்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அயலவர்கள் ஒன்றுகூடிய போது, அட்டகாசம் செய்த இளைஞர்கள் அவ்விடத்தில் இருந்த ஓடிவிட்டனர்.

119 இலக்கத்துக்கும் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கும் அப்பகுதி மக்கள் அறிவித்ததையடுத்து, அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், பாதிக்கப்பட்டவர்களை நேற்றுக்காலை பொலிஸ் நிலையத்தில் புகார்செய்யுமாறு பணித்தனர்.

இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)




# ஈழத்தமிழர்களின் வரலாற்றாவணப்படம் ஒன்றை ஆக்கித்தருமாறு பாரதிராஜாவிடம் வேண்டுகோள்

**மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் விடுத்தார்**

(யாழ்ப்பாணம்)

**ஈழத் தமிழர்களின் உண்மைத்தன்மை மிக்க வரலாற்று ஆவணப்படம் ஒன்றை ஆக்கித் தருமாறு இயக்குநர் இமயம் பாரதிராஜாவிடம் வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் சுற்றுலாத்துறைக்கு பொறுப்பான உறுப்பினருமான பாலச்சந்திரன் கஜதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இயக்குநர் இமயம் என போற்றப்படுபவரும் ஈழத்தமிழரின் நியாயமான போராட்டங்களுக்குத்தொன்று தொட்டு ஆதரவு வழங்கி வருகின்ற இன உணர்வாளனுமான பாரதிராஜா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவரை கௌரவிக்கின்ற நிகழ்வு ரில்ஹோ விடுதியில் திலகராஜா தலைமையில் இடம்பெற்றது. அதில வடமாகாணசபை உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

இயக்குநர் பாரதிராஜாவை இன்று தான் எம்மில்பலர் நேரில் கண்டுள்ளோம். ஆனால் ஈழத்தமிழர் சார்பான போராட்டங்களில் கறுப்புச் சட்டையுடன் அவரை எம் சார்பான ஒரு போராளியாக தொலைக் காட்சிகளில் பார்த்துள்ளோம். தன்னுடைய கரகரப்பான குரலிலே ஈழத்தமிழரின் இன்னல்களை எம்மினிய தமிழ் மக்களே என ஆரம்பித்து அவர் எடுத்தியம்புவதை நாம் பார்த்தும் கேட்டும் வந்திருக்கின்றோம். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தான் சார்ந்த துறையில் தன்னுடைய இடத்தை தக்க வைத்தபடி வலம் வந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு திரையுலக சாதனையாளர் அவர்.

எங்களுடைய மிகப்பணிவான வேண்டுகோள் ஒன்றை அவரிடம் இச்சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகின்றேன். ஈழத்தமிழர்களின் உண்மைத்தன்மை மிக்க வரலாற்று ஆவணப்படம் ஒன்றை சரியான தகவல்களைப்பெற்று ஆக்கித் தந்திட வேண்டும். இதை விரைந்து நிறைவேற்றித்தருவீர்கள் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறிதரன், யாழ்.இந்திய பிரதித் தூதுவர் டி.எஸ்.மூர்த்தி மற்றும் பேராசிரியர்கள், வைத்தியர்கள், வர்த்தக சங்க பிரநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (இ-5)




## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு தண்டப்பணம்

யாழ்.வடமராட்சி வல்லிபுரக் கோவில் பகுதியிலிருந்து சட்ட விரோதமாக மணல் ஏற்றியவருக்கு பருத்தித்துறை நீதிமன்றினால் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில் தொடர்புபட்டவர் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவராவார்.


அதேவேளை கன்டர் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (இ-60)

## மதுபோதையில் இடையூறு பொதுப் பணிக்கு உத்தரவு

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமைக்காக நான்கு பேருக்கு 180 மணி நேர பொதுச்சேவைக்கு பருத்தித் துறைநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த வெள்ளியன்று விசாரணைக்கு வந்த போதே நீதிபதி மேற்படி உத்தரவை வழங்கியுள்ளார்.

சம்பந்தப்பட்ட 4 பேரும் பருத்தித் துறை நீதிமன்ற வளாகத்தில் 180 மணி நேர பொதுச் சேவை செய்யப் பணிக்கப்பட்டுள்ளனர். (இ-60)



தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கும் இயக்குநர் பாரதிராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை மரியாதை நிமிர்த்தமாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது வாசஸ்தலத்துக்குச் சென்று சந்தித்தார். இந்தச் சந்திப்பில் வடக்கு முதல்வருடன் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்து கொண்டிருந்தார்.

# சாவகச்சேரி நகரசபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது

யாழ்.சாவகச்சேரி நகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகர சபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் இடம்பெற்ற அமர்வில் ஆளும் த.தே.கூ.கூறுப்பினர் 9 பேரும். எதிர்க்கட்சியின் ஐ.ம.சு.கூ. உறுப்பினர் 2 பேரும் கலந்து கொண்டனர்.

இவ் அமர்வில் நகர சபையின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தினை நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை முன்வைக்க நகரசபை உறுப்பினரும் சுகாதார குழு தலைவருமான ஞா.கிஷோர் முன்மொழிய ஆளுங்கட்சி நகரசபை உறுப்பினர் த.சுதர்சன் வழிமொழிய சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் இவ் அமர்வில் நகர சபையின் 2015ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் நகர சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாக 4 கோடியே 30 இலட்சத்து 32 ஆயிரம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் நகர சபை நிதியிலிருந்து 23 வீதிகளும் 300 கிராம சேவையாளர் பிரிவில் சபையின் 9ஆம் வட்டாரத்தில் பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது டன சபைக்குட்பட்ட வீதிகளும் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாயில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவு ள்ளன.

அத்துடன் நெல்சிப் திட்ட நிதியிலிருந்து 10 வீதிகளும். மாகாண சபை நிதியிலிருந்து 6 வீதிகளும் 2015ஆம் ஆண்டு அபிவிருத்தி மேற கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வரவுசெலவுத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது எதிர்க்கட்சியின் இரு உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிறுவர்களை எச்சரித்த கோப்பாய் பொலிஸார்

திருட்டு முயற்சியில் ஈடுபட முயன்ற சிறுவர்கள் இருவர் கோப்பாய் பொலிசாரினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் கோவிலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் குறித்த இரு சிறுவர்களும் திருட்டு முயற்சியில் ஈடுபட முனைந்த போது ஆலய சூழலில் நின்றவர்களால் பிடிக்கப்பட்டனர்.

பிடிபட்ட இருவரும் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அச்சிறுவர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

அவ்விருசிறுவர்களும்10 வயதுகளே நிரம்பியவர்கள் என்பதால் சிறுவர்களின் பெற்றோர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து கடுமையாக எச்சரிக்கை செய்த பின்னர் சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வடமராட்சி வலயத்தில் வர்ண இரவு நிகழ்வு-2014

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத் தின் ஏற்பாட்டில் வர்ண இரவு நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகவும் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-60)

# ஓய்வூதியர்களுக்கு இலவச தொலைபேசி இணைப்பு

(மானிப்பாய்)

அரச சேவை ஓய்வூதியர்களிற்கான இலவச தொலைபேசி மற்றும் மொபிடெல் இணைப்பு வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இந் நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"நன்றிக் கடன்" என்ற தொனிப் பொருளுடன் இளைஞர்களால் முதியவர்களுக்கு நன்றிப் பெருக்குடன் மேற்கொள்ளும் வேலைத்திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பிரதேசத்தில் உள்ள சகல ஓய்வூதியர்களிற்கும் இத் திட்டம் பொருந்தும்.

இத் திட்டமானது அவ்வப் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்கள் மூலம் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா கணேசமூர்த்தி



வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் சயன்ஸ் சென்ரர் வீதி, அந்திரான் முருகன் கோவிலடி. நெல்லியடியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கணேசமூர்த்தி அவர்கள் 19.12.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகப்பா- சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -பத்தினி தம்பதியரின் அன்பு மருமகளும் , கணேசமூர்த்தி (இளைப்பாறிய பிரதம லிகிதர்- நீதிமன்றம் பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், சுஜித்தா (நோர்வே), சுஜீவன் (ஜேர்மனி), சுஜித்திரா (ஆசிரியை- முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி), சுகன்ஜா (மாணவி- விவசாய பீடம் -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் , ராஜ்குமார் (நோர்வே), ரூபினி (ஜேர்மனி), நந்தரூபன் (பொறியியலாளர் கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நடேசன், கிருஸ்ணன் (அமுல்கிறீம் ஹவுஸ், உரிமையாளர்- யாழ்ப்பாணம்), சதாசிவம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரி, புவனேஸ்வரி, சத்தியமூர்த்தி, கருணாமூர்த்தி, ராஜேஸ்வரி, சச்சிதானந்தமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.12.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சயன்ஸ் சென்ரர் வீதி,
அந்திரான் முருகன் கோவிலடி,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே.இல. 077 4524 977

# மரண அறிவித்தல்

## அமரர் ஆசீர்வாதம் இம்மனுவல் தெய்வேந்திரம் (குத்தகை)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் இம்மனுவல் தெய்வேந்திரம் (குத்தகை) நேற்று (20.12.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் திரேசம்மா தம்பதியினரின் அன்பு மகனும்காலஞ்சென்ற தம்பிநாயகம், விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவனும், டயானா, எட்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், நெலின், சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராசாத்தி, பச்சைக்கிளி, ராசா, காலஞ்சென்ற யோகம் மற்றும் லூசியா, ரவீந்திரன், காலஞ்சென்ற வவிவாஸ் மற்றும் றதி, குமார், கொன்சி, சின்னவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருணா, பரினா, ஜசன், மெரினா, மிலிசன், திலிபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஐசு, செறா, அஜிஸ், செடோனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (22.12.2014) இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 7/6 மத்தியகிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா 20.12.2014

## நலம்புரியும் வலம்புரிக்கு வாழ்த்துக்கள்

பத்திரிகைத்துறையின் வித்தகனாய்
முத்தெனும் பணிதனை விதைத்தவன்–நீ
சங்கொலியை எங்கும் பரப்பி
மங்காப் புகழின் மன்னவன் –நீ
வயது பதின் ஐந்தின் இளைஞன் நீ
வளரும் பருவத்து சூரியன் நீ
வாழ்த்திடுவோம் வாசகர் நாம் மகிழ்வுடனே
புகழ் பரப்பும் தமிழ் பரப்பின் வலம்புரிக்கு
நலம் பல கண்டோம்
வலம்புரியின் வளர்ச்சிப் பயணத்தில்
நல்லாசிகள் கூறுகின்றோம்
மேலும் சிறப்புடன் வலம் வர வாழ்த்துகின்றோம்.

யாழ்.ராகஸ்வரம் இசைமன்றம்

## குலவிளக்கே வாழியவே

குலவிளக்கே வாழியவே
செம்மொழியாம் செந்தமிழிற்
சிறப்புடனே செய்திகளை
ஐம்மூன்று ஆண்டுகளாய்
அறிய வைத்த வலம்புரியே!
நம்மிதயத் துணர்வுடனே
நலம்பெறவே வாழ்த்துகின்றோம்
எம்மினத்திற் கிசைந்தனவாய்
இயற்றிடுவாய் நற்பணிகள்!
நடுவு நிலை தவறாது
நன்னெறியைக் காத்து நல்ல
தடுமாற்றமில்லாத
தகவல்களைத் தந்து பலர்
விடு பிழைகளைக் கூறி
விழிப்புணர்வு ஊட்டவல்ல
கெடுதலிலா வலம்புரியே,
கிழக்கிலெழும் சூரியனே!
நிறைவாகச் செந்தமிழில்
நேர்த்தியாய்க் கட்டுரைகள்,
கறை வாராக் கவிதைகள்,
காலத்துக் கேற்ற பல
துறை சார்ந்த பெரியோரின்
பேச்சுரைகள் யாவும்
குறைவின்றித் தந்துதவும்
குலவிளக்கே வாழியவே!

மதிவாணர் செ.மதுசூதனன்
மண்டைதீவு

## ஈழத் தமிழ் சுடரே வாழி

எழுச்சியின் திறவு கோலே
எண்ணத்தின் நாற்றாங்காலே
விழிப்புற்ற தமிழர் தாயகத்தின்
விடிவெள்ளித் தூதுவனே –நாங்கள்
தொழுகின்ற இறையே வலம்புரியே
தொகை நூலே ஏழைத் தோழன்
அழுகையை அழிக்கும் நாளேடே
அகிலமா மறக்கும் உம்மை
நிறைவுக்கோர் நிலையமே வலம்புரி வாழி
நெடு மறைப் பொருளே வலம்புரி வாழி
துறைதொறும் சோதியான வலம்புரி வாழி
தொன்மையை நடுநிலை பேணும் நாயகனே வாழி
இறையருள் ஆணையேற்ற ஆதவனே வாழி
ஈழத்தமிழர் உலகின் காவலனே வாழி
பிறையணி சிவனார் ஆசி பெற்று வாழி
பேருலகும் போற்றும் வலம்புரியே வாழி

**வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்**
**(வானொலி தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர், பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்)**

## பல்லாண்டு காலம் வாழ்க...

நெறி தவறாது தினமும் அரசியல், கல்வி, விளையாட்டு, உலகச் செய்திகள் முதலியவற்றை வெளியிடுவதுடன் உத்தமப் பெரியார்கள், உலகப் பொது அறிஞர்கள், தத்துவ ஞானிகள், தவப் புதல்வர்கள் இத்தகையோரின் மொழி வடிவங்களை தினமும் அறிவூட்டும் வர்ணஜால பத்திரிகையாய் தமிழ் மக்களிடையே உலா வரும் வலம்புரி பத்திரிகையே! உனது அளப்பரிய சேவையால் பால்ய பராயத்தை அடைந்து பல எதிர்ப்புகளையும் சம்காரம் செய்து வீறுநடை போடுகின்றாயே! உன்னை என் மனமார வாழ்த்துகின்றேன். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று தொடரட்டும் உன் பணி பல்லாண்டு வாழ்க வளமுடன்.

சுப்பையா பரம்சோதி–சமாதான நீதவான்
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.


## யாழ்ப்பாணத்தின் தவமுனிவன் சிவயோக சுவாமிகளின் மகா வாசகத்தை வழி வழியாய் தொடரும் வலம்புரி

வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்திற்கு தனித்துவமான தனிச் சிறப்புண்டு. யாருக்கும் அஞ்சாத அருஞ் சொற்களை தமிழ்த்தாயின் சொத்தான இதிகாசங்களில் இருந்து ஆய்ந்து அறிந்து தற்கால நிகழ்விற்கு பொருள் பொதிந்த வாசகங்களை தனது கருத்தோடு இணைத்து இரண்டடிக் குறளின் தனித்துவத்திற்கு இணையான கருத்தாழத்தை உட்பொருளாக்கி கற்றறிந்த சான்றோர் வியக்கும் வகையில் பக்கச்சார்பற்ற நடுநிலையில் நின்று நோக்கி சமன் செய்து சீர்தூக்கும் நீதி நிலை நின்று, நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்று சிவபெருமானோடு வாதிட்ட நக்கீரன் வழி நின்று பத்திரிகா தர்மத்தின் சத்தியம் தவறாது யாழ்ப்பாணத்தின் தவமுனிவன் குருநாதன் சிவயோகசுவாமிகள் சொன்ன உண்மையை உண்மையாகவே எழுதுங்கள் என்ற அருள் வாசகத்தின் உட்பொருளை உலகிற்கு உணர்த்துகின்ற ஊடகமாக வலம்புரி உலகத்து ஊடகங்களுக்கெல்லாம் உற்ற உறவினராய் திகழ்கின்றது. வலம்புரியின் உன்னத பணி காலமெலாம் தொடர தெய்வீகத் திருவருளையும் குருவருளையும் வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவு நாளில் பிரார்த்திக்கின்றோம். வளர்க வலம்புரிச் சேவை. வாழ்க வலம்புரிக் குடும்பம்.

நயினை–நாகமணி–கோபாலகிருஷ்ணன்
தலைவர்,
சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்

# மோடி அரசின் மீது தமிழர் நம்பிக்கை

## பா.ஜ.க. பொதுச் செயலர் முரளிதரராவ் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளதாகவும் தீராப் பிரச்சினையாக நீடித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு குறித்து பிரதமர் நரேந்திர மோடி தீர்க்கமான முடிவெடுப்பார் என நம்புவதாகவும் பா.ஜ.கவின் தேசிய பொதுச் செயலாளர் முரளிதரராவ் தெரிவித்துள்ளார்.**

சென்னையை அடுத்த மறைமலை நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாஜக பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த பா.ஜ.கவால் மட்டுமே முடியும். மீனவர் பிரச்சினை, இலங்கை தமிழர் பிரச்சினையை தீர்க்க மோடி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நான் சில மாதங்களுக்கு முன்பு இலங்கை சென்றபோது அங்குள்ள தமிழர்களைச் சந்தித்தேன். அவர்கள் மோடி அரசு மீது மிகுந்த நம்பிக்கையோடு உள்ளனர். பா.ஜ.க. அரசின் மீதும் ஈழத்தமிழர்கள் அதிக நம்பிக்கை வைத்திருப்பதை அறிய முடிந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இங்கு கருத்து வெளியிட்ட தமிழக பாஜக தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவிக்கையில்,

மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என் பதில் பா.ஜ.க. அரசு உறுதியோடு உள்ளது. மோடி அரசின் நடவடிக்கையால் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று பா.ஜ.க. அரசை புகழ்ந்தார். (இ-5)

# ஷிராணி பண்டாரநாயக்க மீண்டும் பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவார்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் அந்த பதவியில் நியமிக்க போவதாக பொது வேட்பாளா மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அத்துடன் 2010 ஆம் ஆண்டு பொது வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுககு நியாயத்தை நிறைவேற்ற போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் பிரதம நீதியரசரும், முன்னாள் இராணுவத் தளபதியும் அரசியல் பழிவாங்க லுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதால், அவர்கள் இரு வருக்கு நியாயத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மீனவர் உயிரிழந்த சம்பவத்திற்கு நீதியான விசாரணை வேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் விந்தன்

யாழ்.எழுவைதீவு மீனவர் சங்க உபதலைவர் உயிரிழக்கக் காரணமான கடற்படையின் செயற்பாட்டைத் தாம் கண்டிப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கோரியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்க உபதலைவரும் எழுவைதீவு நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்தவருமான அன்ரனி யேதாசனை நெடுந்தீவிலிருந்து காங்கேசன்துறை நோக்கி வேகமாக வந்த கடற்படையினர் தங்கள் டோறா படகு மூலம் யேசுதாசனின் படகை மோதித்தள்ளி படகை சேதப்படுத்தியதோடு யேசுதாசனை படுகாயப்படுத்தி கடலில் தத்தளிக்க விட்டுச் சென்ற கடற்படையினரின் செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கதொன்று. படுகாயமடைந்த யேசுதாசன் உடைந்த படகின் பலகைத்துண்டின் உதவியோடும் கடலில் தத்தளித்து கொண்டிருந்த நிலையில் நாற்பத்தைந்து நிமிடங்களின் பின்பு சகமீனவர்களின் உதவியோடும் கரைசேர்க்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். கடற்படையினர் தங்கள் படகு மூலம் யேசுதாசனின் படகினை தவறுதலாக மோதியிருந்தால் காயப்பட்ட வரை உடனே மீட்டு அருகிலுள்ள காரைநகர் கடற்படை முகாம் வைத்தியசாலையில் சேர்ப்பித்து அவரின் உயிரை காப்பாற்றியிருக்கலாம். கடற்படையினர் இதை செய்யத்தவறியதன் மூலம் யேசுதாசனை திட்டமிட்டே படுகொலை செய்திருப்பார்களோ என சந்தேகிக்கத்தோன்றுகிறது.

நான்கு பெண் பிள்ளைகளும் இரண்டு ஆண் பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைகளின் தந்தையாகிய இவரே தினமும் கடலுக்கு சென்று மீன்பிடித்து குடும்பத்தின் வாழ்க்கை நிலையை பார்த்து வந்தவர். அடிப்படையிலே மிகவும் வறுமைக்கோட்டுக்குள் வாழ்ந்த இக்குடும்பம் தந்தையாரையும் கணவரையும் இழந்து இன்று செய்வதறியாது சோகத்தில் தத்தளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடற்படையினரின் இத்தகைய வெறிச்செயல் எழுவைதீவு கிராமத்தை மட்டுமல்ல முழு தீவகத்தையுமே சோகத்தில் ஆழ்த்தி உலுக்கியெடுத்துள்ளது.

தற்பொழுது நடந்த சம்பவத்தை மூடிமறைப்பதற்காக இனந்தெரியாத சில நபர்கள் யேசுதாசனின் உறவினர்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் தொலைபேசியூடாகவும் அச்சுறுத்தும் விதமாக தொந்தரவு கொடுத்து வருவதாக எனக்கு தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. யேசுதாசன் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் வரை நடந்த சம்பவங்களை அவர் உறவினர்களிடம் விபரித்து இருக்கின்றார். அதுமட்டுமல்ல யேசுதாசனின் பட்குடன் மோதுண்ட டோறா படகின் வர்ணப்பூச்சும் சேதமடைந்த யேசுதாசனின் படகில் பதிந்துள்ளது.

எனவே கடற்படையினரின் இச்செயல் தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்பட்டு குற்றமிழைத்தவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அத்தோடு அரசாங்கம் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு பெருந்தொகை நட்டஈட்டினையும் உடனடியாக வழங்க வேண்டும் எனவும் கோருகின்றேன் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்மை அரசியல் ரீதியாக கட்டுப்படுத்தி தடங்கல்களைப் போட்டு வருகின்றனர்

## வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



(முழங்காவில்)

**எம்மை அரசியல் ரீதியாகக் கட்டுப்படுத்தி பலவித தடங்கல்களைத் தந்து தடைகளைப் போட்டு தகுந்தவாறு அபிவிருத்தி அடைய அரசாங்கம் விடுகின்றதில்லை. அத்துடன் எம்மைச் சுற்றி உலகம் மிக வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாம் அதற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் செயற்பட மறுத்தால் நாம் புறக்கணிக்கப்படுவோம் நாம் பின்னடைவுகளுக்கு உள்ளாவோம் இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.**

முழங்காவில் கற்பகா கணனிப் பயிற்சி நிலைய திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு முழங்காவில் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

இங்கிலாந்தில் உள்ள வோல்த்தம்ஸ்டோவ் கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் இன்று தான் பிறந்த நாட்டையும் அவர் புகுந்த நாட்டையும் ஒன்று கூட்டி பொருளாதார நலத்தைத் தனது பிறந்தகத்திற்கு நல்கியுள்ளார் கோபால கிருஷ்ணன்.

இன்று எமது வடமாகாண அபிவிருத்தியானது ஏன் கிழக்கு மாகாண அபிவிருத்தியுங் கூடத்தான் எமது உறவுகளின் ஊக்குவித்தலிலும் உற்சாகத்திலுந் தான் தங்கியுள்ளது. எம்மை அரசியல் ரீதியாகக் கட்டுப்படுத்தி, பலவித தடங்கல்களைத் தந்து, தடைகளைப் போட்டு தகுந்தவாறு அபிவிருத்தியடைய அரசாங்கம் விடுகின்றதில்லை.

கேவலம் வடமாகாண முதலமைச்சர் பேரில் ஒரு உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கைத் திறக்கக் கூட ஆளுநர் அனுமதிக்கின்றார் இல்லை. ஆனால் தம் பெயரில் ஆளுநர் நம்பிக்கை பொறுப்பு வங்கிக் கணக்கு என்று ஒன்றை வைத்திருந்து அதைச் செயற்படுத்தி வருகின்றார்.

நாங்கள் தனிப்பட்ட கணக்குகளைத் திறக்கலாந்தான். ஆனால் பாரிய பணம் அந்தக் கணக்குகளுக்கு வந்து சேர்ந்தால் உடனே அலுவலர்கள் கொழும்பிலிருந்து வந்து எங்கிருந்து வந்தது பணம், யார் அனுப்பினார்கள் இந்தப் பணத்தை, இது இங்கிருந்து சென்ற கறுப்புப் பணம் வெள்ளைப் பணமாக மாற்றம் பெற்று இங்கு வந்த பணமல்லவா? தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள் அனுப்பிய பணமல்லவா? புலிகளின் பணமல்லவா? பூனையின் பணமல்லவா? என்றெல்லாம் ஆராயத் தலைப்படுவார்கள். அவுஸ்திரேலியாவில் இருந்து சுகாதார அமைச்சர் மருத்துவ ரீதியான கருவிகள் வாங்க அங்கு எமது உறவுகள் கொடுத்த பணத்தை இங்கு வவுனியா வங்கியில் வைப்பிலிட அதுபற்றித் தேடத் தொடங்கி விட்டார்கள் எமது தேசிய தேடுநர்கள்! வங்கியின் சிரேஷ்ட அலுவலர்கள் கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். இது தான் இன்றைய நிலைமை.

அண்மையில் நான் திறைசேரி செயலாளரைச் சந்திக்கச் சென்றேன். முன்னர் ஜனாதிபதியை இவ்வருடம் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி சந்தித்த போது ரூபா நூறு மில்லியனுக்குக் குறைந்த தொகையினைக் கொண்ட சிறிய செயற்றிட்டங்கள் தொடர்பான வெளிநாட்டுப் பணங்களை எமது வங்கிக் கணக்குகள் ஊடாக இங்கிருந்து நாங்கள் பெற ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஏன் என்றால் அந்தச் சமயத்தில் அப்பணங்களை செயற்றிட்டங்கள் சம்பந்தமாகக் கொண்டு வரும் போது அவை வெளிநாட்டு வளங்கள் சார்பான திணைக்களத்தின் ஊடாகக் கொண்டு வரவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அதுபற்றி ஜனாதிபதி திறைசேரி செயலாளருடன் பேசச் சொல்லியிருந்தார். திறைசேரி செயலாளர் டீ.ஜயசுந்தரவை நான் அண்மையில் சந்தித்த போது அவர் மிக வினயமாக உத்தியோகபூர்வ வங்கிக கணக்கொன்றைத் திறந்தீர்களானால் அதற்கு வெளிநாட்டுப் பணங்களை நேரடியாக வரச் செய்யலாம் என்று கூறினார். தாங்கள் தடைகள், தவிர்ப்புக்கள் எதனையும் ஏற்படுத்தமாட்டார்கள் என்றும் கூறினார். அதுமட்டுமல்ல ஏன் அவ்வாறு செய்ய எம்மை அனுமதிக்கின்றார் என்றும் கூறினார்.

அதாவது உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படுவதால் அவை சம்பந்தமாக கணக்காய்வாளர் நாயகம் மூலம் திறைசேரி கட்டுப்பாட்டை வைத்திருக்கும் என்று கூறினார்.

யாழ்ப்பாணம் திரும்பியதும் தான் அறிந்தேன் எமக்கான உத்தியோகபூர்வ கணக்கான "முதலமைச்சர் வங்கிக் கணக்கை" முடக்கிவிட்டுள்ளார். எமது முபபடைத் தளபதியான ஆளுநர் என்று. உத்தியோகபூர்வமான கணக்கை நாங்கள் திறக்க முடியாதென்றால் திறைசேரி செயலாளர் கூறியவாறு வெளிநாட்டில் இருந்து பணத்தைத் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்குக் கொண்டுவரும் போது அவை திறைசேரியினால் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவன.

தேவையெனில் வங்கிக் கணக்கை ஸ்தம்பிக்கவும் செய்யலாம் அவர்கள். இப்பொழுது வெளிநாட்டுப் பணங்களை நாங்களே நேரடியாக மக்கள் நலன் கருதிப் பாவித்து வருகின்றோம்.

அதாவது வெளிநாட்டிலுள்ள எமது உறவுகள் தாமாகவே நேரடியாக எமக்கு உதவிசெய்து வருவதை வரவேற்கின்றோம். நாம் நடுவில் இருந்து நற்செயல்கள் நடைபெறுவதை உறுதி செய்து வருகின்றோம்.

இன்று இப்பிரதேசத்திற்குக் கணனிப் பயிற்சி நிலையம் அமைக்கப்படுவது சாலப் பொருந்துமே. எமது மக்கள் கணனிப் பயிற்சி கட்டாயத் தேவையாகி வருகின்றது. இதை எதற்குக் குறிப்பிடுகின்றேன் என்றால் எம்மைச் சுற்றி உலகம் மிக வேகமாகச் செயறபட்டுக் கொண டிருக்கின்றது. நாம் அதற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் செயற்பட மறுத்தால் நாம் புறக்கணிக்கப் படுவோம். நாம் பின்னடைவுகளுக்கு உள்ளாவோம் என்றார். (2)




# இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் உயருமாகில் எந்நேரத்திலும் வான் கதவுகள் திறக்கப்படலாம்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் எச்சரிக்கை



(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் கனமழையினை அடுத்து குளங்கள் உடைப்பெடுத்து வருவதோடு தாழ் நிலங்களில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன் குளமான இரணைமடுக் குளத்துக்கான நீா வரத்து அதிகரித்துள்ளது. இக்குளத்தின் நீர்மட்டம்நேற்றைய தினம் 30 அடி 2 அங்குலமாக அதிகரித்துள்ளதாகவும் 31 அடிக்கு மேல் நீர மட்டம் உயாந்தால் வான் கதவுகள் திறக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் என்.சுதாகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இரணைமடுவின் நீர்மட்டம் 30 அடி 2 அங்குலமாக அதிகரித்துள்ள நிலையில், இந்த மாவட்டத்தில் தொடர்மழை பெய்தால் இககுளம் வான் பாயும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த 72.55 மில்லி மீற்றர் மழையால் இரணைமடு குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்தது.

இதனால்வான்பாயும்அபாயம்இருபதாகவும் வான் பாயும் பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பு, அனர்த்த பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன பற்றி நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

தற்போது, மழை குறைந்துள்ளதுடன் இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்தும் குறைந்துள்ளது. நேற்று காலையில் 30.2 அடியாக குளத்தின் நீர்மட்டம் இருக்கின்றது. 31அடிக்கு மேல்நீர மட்டம் உயர்ந்தால வான் கதவுகள் திறக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களில் அக்கராயன் குளம் 19 அடி 2 அங்குலமாகவும், கரியாலை நாகபடுவான் குளம் 06 அடி 06 அங்குலமாகவும், கல்மடு குளம் 23 அடி 5 அங்குமாகவும், கனகாம்பி கைக் குளம் 10 அடி 7.5 அங்குலமாகவும் (1.5 அங்குலம் வான் பாய்கிறது), வன்னேரிக்குளம் 09 அடி 09 அங்குலமாகவும் (3 அங்குலம் வான் பாய்கிறது), முறிப்பு குளம்14 அடி 02 அங்குலமாகவும், பிரமந்தனாறு குளம் 10 அடி 10 அங்குலமாகவும், குடமுறுட்டி குளம் 0,8 அடி 07 அங்குலமாகவும்(2 அங்குலம் வான் பாய்கிறது) நீர்மட்டம் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன குளத்துக்கு கீழுள்ள 6 குளங்களில் வான் பாய்கின்றதாக முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் நேற்று தெரிவித்துள்ளார்.

தட்டயமலைக்கு 14 அடியாகவும் (3 அங்குலம் வான் பாய்கிறது), விஸ்வமடுக் குளம் 20 அடி 8 அங்குலமாகவும் (5 அங்குலம் வான் பாய்கின்றது), கணுக்கேணி குளம் 12 அடி 09 அங்குலமாகவும் (3 அங்குலம் வான் பாய்கிறது), உடையார்கட்டுக் குளம்23 அடி அங்குலம்11 அங்குலமாகவும் (7 அங்குலம் வான் பாய்கிறது), மருதமடுக்குளம்14 அடி 4 அங்குலமாகவும் (2 அங்குலம் வான் பாய்கிறது), மடவாளசிங்கக் குளம் 16 அடி 8 அங்குலமாகவும் (2 அங்குலம் வான் பாய்கிறது) நீர் மட்டம் காணப்படுகின்றது.

இதனைவிட, முத்தையன் கட்டுக் குளம் 15 அடி 02 அங்குலமாகவும், தண்ணிமுறிப்புக்குளம் 11 அடியாகவும் காணப்படுவதாக பொறியியலாளர் தெரிவித்தார். (2)

# இதுவரை காணிகள் வழங்கப்படாத அரச ஊழியர்களுக்கு காணிகள் வழங்கப்படும்

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

2015 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இதுவரை எதுவித காணிகளும் இன்றி வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல கரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

கடந்த 18 ஆம்திகதி வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திசங்கத்தினருக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பொன்றில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்ட செயலகத்தினால் ஏற்கனவே 300 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. அதில் இன்னமும் வீடுகட்டாத அரச ஊழியர்கள் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு காணிகள் அற்ற வவுனியா மாவட்டத்தில் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. மேலும் 300 ஏக்கர் காணி புதிதாக பலருக்கு வழங்கப்படவுள்ளன.

2015 ஆம் ஆண்டு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் இலங்கையின் முன்மாதிரியான வீட்டுத்திட்டமாக ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் இருக்கும் வீதி புனரமைப்பு மின்விளக்குகள் அமைத்தல். சுப்பமாக்கற் உட்பட பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்படும் முறபகுதியில் உள்ள காட்டுத் துண்டு அகற்றபபட்டு அங்கு முன்மாதிரியான கடைத்தொகுதி அமைக்கப்படும் இங்கு வசிக்கும் அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலம் உண்டு. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் வீடமைப்பு அதிகாரசபையின் பொறுப்பில் இவ் வீட்டுத்திட்ட காணிகள் அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும். ஓமந்தை அரச ஊழியர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாகவே வீடு கட்டாத காணிகள் ஏனைய அரச ஊழியர்களுக்கு மாற்றி கொடுககப்படும். காணிகள் தேவையான வர்கள் தொடர்பான விபரங்கள் கோரப்படவுள்ளன என்றார்.

இச்சந்திப்பில் ஓமந்தை கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் கு.சண்முகலிங்கம், செயலாளர் க.பேர்ணாட், துணுக்காய் பிரதேசசெயலக தலைவர் குணபாலன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (2-250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரியாதையைக் கொடுக்கும் தொழில்!

..."ஓகோ! நீங்கள் கிரா மத்து ஆசாமிகளா? பாவம்! நாள் முழுவதும் மூட்டையைத் தலையில் ஏற்றித் தெருத்தெருவாக அலைந்து களைத்து இருப்பீர்கள்.

அதிருக்கட்டும்! இப்படி நாள்



முழுதும் உழைத்து, இவன் எப் படி தொந்தியும், தொப்பை யுமாக இருக்கிறான்?" என்று சோமனைக் காட்டிக் கேட்டான்.

சோமனுக்கு பயத்தில் உயிரே போய் விடும் போலிருந்தது.

தான் இன்று சிக்கிக் கொள்வோம் என்று நடுங்கினான்.

**அம்புலிமாமா கதைகள்**

அதற்குள் உயரமான திருடன் சாமர்த்தியமாக, "ஐயா! நாங்கள் சகோதரார்கள்.

இவன் என் தம்பி பீமன்! சரியான சோம்பேறி! உழைக்காமல் உண்டு பெருச்சாளி போல் இருக்கின்றான்.

இன்று தான் முதன் முதலாக மூட்டை தூக்கி வியாபாரம் செய்ய வந்திருக்கிறான்!" என்றான்.

அதைக்கேட்டு பலமாகச் சிரித்த காவலன், அவர்களுக்கு சத்திரம் செல்லும் வழியைக் காட்டி விட்டு, "சரி! நீங்கள் நேராக அங்கு சென்று விடுங்கள்! ஒரு மணி நேரம் சென்ற பின், நான் அங்கு வந்து நீங்கள் இருக்கிறீர்களா என்று சோதனை செய்வேன்!" என்று எச்சரித்து விட்டுக்கிளம்பினான்.

சோமனுக்குச் சென்ற உயிர் மீண்டது.

ஆயினும், திருட்டுத் தொழில் மீது அக்கணமே வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

" சே! ஒவ்வொரு நொடியும் பயப்பட வேண்டி இருக்கிறது. கண்டவரிடமெல்லாம் பொய் பேச வேண்டியிருக்கிறது.

காவலர்கள் கையில் மட்டும் அகப்பட்டால், நம்மைப் பின்னி எடுத்து விடுவார்கள்.


இப்படி பயந்து பயந்து அடி, உதை வாங்கிக்கொண்டு இந்தத் தொழிலை செய்ய வேண்டுமா? என்று அவனுக்குத் தோன்றியது.

மற்ற இருவரும் அவனை ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றனர்.

அது ஒரு வைர வியாபாரியின் வீடு.


சோமனை வாயிலில் காவலுக்கு நிறுத்தி விட்டு, அவர்கள் இருவரும் உள்ளே புகுந்தனர்.

உடனே, தப்பித்தோம், பிழைத்தோம் என்று சோமன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரம் சென்றதும், தான் விட்டு வந்த மாளிகை அருகே ஒரே கலவரமும், ஆரவாரமும் கேட்டு,



திடுக்கிட்டுத் திரும்பினான்.

தன்னுடன் வந்த திருடர் களில் ஒருவன் மாட்டிக் கொண்டதையும், தப்பியோடும், மற்றவனை, காவலர்கள் துரத்துவதையும் கண்டு, இருட்டான ஒரு சந்தில் ஓடி ஒளிந்து கொண்டான்.



சற்று நேரத்தில், காவலர்கள் இரண்டு பேரையும் கைகளைக் கயிற்றினால் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றனர்.

"கடவுளே! இந்நேரம் நான் சிக்கியிருந்தால், என்னையும் அல்லவா சவுக்கால் அடித்து இழுத்துச் சென்றிருப்பார்கள் என்ன தவறு செய்ய இருந்தேன்!

இனி, திருடுவதைப் பற்றி கனவில் கூட நினைக்கக் கூடாது!" என்று எண்ணியவாறு வீட்டை அடைந்தான்.

மறுநாள் அவன் மனைவி, "நேற்றிரவு, இரண்டு திருடர்களைக் காவலர்கள் துரத்திப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். தப்பித்து ஓட முயற்சித்த இருவரையும் காவலர்கள் கொன்று விட்டார்கள்! என்றாள்.

சோமன் மனத்திற்குள் கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு, கடவுளே! இனி, நான் அந்த மோசமான தெழிலைப் பற்றி நினைத்துக் கூடப்பார்க்கமாட்டேன். கிடைத்தது போதும் என்று இப்போது செய்யும் வியாபாரத்தையே தொடர்ந்து செய்வேன்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டான். (முற்றும்)

## 12.2014 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1790 - துருக்கியின் இஸ்மாயில் நகரை ரஷ்யாவின் சுவோரவ் என்பவனும் அவனது படைகளும் கைப்பற்றின.
- 1807 - வெளிநாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகளை நிறுத்தும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டது.
- 1845 - பஞ்சாபில் ஃபெரோசிஷா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் சீக்கியர்களைத் தோற்கடித்தனர்.
- 1851 - இந்தியாவின் முதலாவது சரக்கு ரயில் உத்தராஞ்சல் மாநிலத்தில் ரூர்க்கீ நகரத்தில் ஓடவிடப்பட்டது.
- 915 - மலேசியாவின் இலங்கைத் தமிழரால் வாங்கப்பட்ட யாழ்ப்பா ணம் என்ற விமானம் பிரித்தானிய வான்படைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- 1937 - லிங்கன் சுரங்கம் நியூயோர்க் நகரில் பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: போரில் பாவிப்பதற்கென வீ-2 ஏவுகணைகளை உற்பத்தி செய்ய ஹிட்லர் உத்தரவிட்டார்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: வியட்நாமில் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிராக வியட்நாம் மக்கள் இராணுவம் அமைக்கப்பட்டது.
- 1989 - ஒரு வார சண்டையின் பின்னர் இயோன் லியெஸ்கு கம்யூனிச ஆட்சியாளரான நிக்கலாய் செய்செஸ்குவை வீழ்த்தி ருமேனியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1989 - கிழக்கு ஜேர்மனியையும் மேற்கு ஜேர்மனியையும் பேர்லினில் பிரித்த "பிராண்டன்பேர்க் கதவு" 30 ஆண்டுகளின் பின்னர் திறந்து விடப்பட்டது.
- 1990 - மார்ஷல் தீவுகள், மைக்குரோனீசியா கூட்டு நாடுகள் ஆகியன விடுதலையடைந்தன.


### பிறப்புகள்

- 1666 - குரு கோவிந்த் சிங், சீக்கிய குரு (இ. 1708)
- 1853 - அன்னை சாரதா தேவி, (இ. 1920)
- 1858 - ஜாக்கோமோ புச்சீனி, இத்தாலிய இசையமைப்பாளர் (இ. 1924)
- 1887 - இராமானுசன், இந்தியக் கணிதவியலாளர் (இ. 1920)

### இறப்புகள்

- 1995 - ஜேம்ஸ் மீட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1907)
- 2006 - வி. நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (பி. 1910)
- 2008 - லன்சானா கொண்டே, கினியின் அரசுத் தலைவர் (பி. 1934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 27

..ஒழுங்கு மரியாதையா ஒக்காரல ஒங்க சுடுகாடு மொதலக்கம்பட்டியில இல்ல; சொக்கத்தேவன் பட்டியிலடி சலம்பல் பாண்டியும் ஒலக்கையனும் வேட்டிய வரிஞ்சு கட்டி வெரசு காட்றாங்க.

பன்னியான் பேரன் பாவம்... அருவாப் பொதைச்ச எடம் அடையாளம் தெரியாம மேலயும் கீழயும் முழிக்கிறான்.

அம்பலக்கல்லுல அதுவரைக்கும் ஒக்காந்திருந்த காவக்காரச் சக்கணன் படக்குன்னு எந்திருச்சு பூண்போட்ட காவக்கம்ப அம்பலக்கல்லுல நாலு தட்டு தட்டி ஏலே வெங்கம்பயகளா! பஞ்சாயத்த நீங்க நடத்துங்கடா.

நாங்க வெளியேறிக்கிறோம்ன்னு ஒரு சத்தம் விட்டு அத்தன பேரையும் அமத்திப்புட்டு சீர்செஞ்ச பொருளைச் சேத்துருங்கப்பான்னு முடிவும் சொன்னாரு.

அம்மிக் குழவியிலிருந்து அருவாமனை வரைக்கும் எல்லாம் வந்து எறங்கிருச்சு பஞ்சாயத்துல.

யாத்தா எல்லாம் எண்ணிப் பாத்துக்க.

நாளைக்கி நாங்க இருக்க மாட்டோம்.

அப்பறம் அதக் காணோம்ன்னு இங்க வந்து பொலப்புனா அரச மரம் வாங்கித்தாரது.

சரி பாத்துக்க....

எம் பொண்ணே பொழப்பத்து வந்த பெறகு எந்தப் பொருள் வந்தா என்னா... வராட்டி என்னா....

பெரிய மூக்கி பெருங் போக்காப் பேசிட்டாலும் அரப்பார்வையிலேயே ஒரு அலசு அலசி ஒலவட்டி ரெண்டுல ஒண்ணக் காணோம்னு கண்டு புடிச்சுட்டா.

ஒல வட்டி ரெண்டு குடுத்தேன்.. ஒண்ணக் காணோம் போனாப் போகுது.

அண்ணந்தானே அதுலயே கஞ்சி குடிக்கட்டும்; இல்ல.. அத அடகுவச்சுக்கஞ்சி குடிச்சிரட்டும்.

அந்தச் சொல்லோட சூடுதாங்க மாட்டாத சடையத் தேவருக்கு மீசைக்கு மேல ரோசம் பொத்திக்கிட்டு வந்திருச்சு.

ஏலே எங்கடா அந்த ஒலவெட்டி நாய் சாம்பாரிச்ச பொருள் நம்மளுக் கெதுக்கு? எறுஞ்சிருங்கடா.

செத்தவிடத்தல அந்த ஒலவட்டியும் வந்து சேர்ந்திருச்சு.

கடைசிக் கட்டத்துக்கு வந்து நிக்கிது பஞ்சாயத்து.



தொண்டைய ஒரு செருமிச் செருமி சத்தமும் கொஞ்சங் கூட்டிக் கட்டையன் ஆரம்பிக்கிறான் வெவகாரத்த.

அவுக பொருள அவுகளுக்குக் குடுத்திட்டோமில்ல; எங்க பொருளு எங்களுக்கு வந்திரணுமில்ல. நியாயந் தானப்பா; ஒம் பொருள் உனக்கு வந்திரனும்.

அப்பக் கேட்டு வாங்கிக் குடுத்திருங்க.

எத?

தாலிச் சரட;

தாலிச்சரடு வாங்குறதுதான் தீக்கிற பஞ்சாயத்துல கடைசி சம்பவம்.

அது முடிஞ்சா எல்லாம் முடிஞ்சு போகும்.

பஞ்சாயத்த விட்டுப் பொம்பளையக் கொஞ்சம் தள்ளி நிறுத்தி மஞ்சத் தண்ணி தெளிஞ்சுத் தாலிச்சரட வாங்கிப் புருசன் கையில ஒப்படைச் சிருவாரு நாட்டாம. அந்த நிமிசத்துலயிருந்து அவனுக்கும் அவளுக்கும் ஒட்டுமில்லாம ஒறவிமில்லன்னு ஆயிரும்.

தாலிச்சரடு வாங்கிறபோது பல பெருசுக இந்தப் பாவம் நம்மளச் சேரவேணாம்ன்னு சொல்லாமக் கொள்ளமப் போயிரும்ங்க.

தாலிச்சரடுன்னா வெறும் கயிறா? ஒரு ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் மத்தியில ஊடாடுற உயிரு. அவுக மதிப்பு அப்படி.

சரி சரி யம்மா பிள்ள கருவாச்சி. கட்டையனுக்கும் ஒனக்கும் இல்லேன்னு ஆகிப் போச்சு.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவலைகள் இன்றி வாழ்தல்!

...நீங்கள் உங்களுக்குள்ளேயே திட்டத்தை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்ளும் பொழுது உங்கள் சக்தி அதிலேயே வடிந்து விடுகிறது. சக்தியை திட்டத்தைச் செயற்படுத்த உபயோகிப்பதற்குப் பதிலாக வெறுமனே வீணாக்கி விடுகிறீர்கள். பிறகு வேலை எப்படி முடியும்.

இன்னொரு விடயம். உண்மையிலேயே உங்களுக்கு வேலையை முடிக்கும் விருப்பம் இருந்தால் நீங்கள் கவலைப்படாமல் அதைச் செய்வதில் இறங்குவீர்கள். நான் சொல்கிறேன்.. மன இறுக்கமும் கவலையும் உண்மையிலிருந்து ஓடிவிட உதவும் நொண்டிச் சாக்குகள். மன இறுக்கம் மற்றும் கவலை என்ற போர்வையின் கீழ் நீங்கள் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறீர்கள்.

ஒவ்வொரு பிரச்சினையும் தீர்வையும் அதனுடன் சுமந்து கொண்டுதான் இருக்கிறது. உண்மையிலேயே உங்களுக்கு அதைத் தீர்க்கும் விருப்பம் இருந்தால் நீங்கள் அதைச் செய்வீர்கள். நீங்கள் பிரச்சினையை ஆழ்ந்த விழிப்புணர்வுடன் உற்றுநோக்க வேண்டியதுதான். தீர்வு தானாகவே வெளிவந்துவிடும். உங்களுக்கு அதைத் தீர்க்கும் விருப்பமின்றி, ஆனால் அதைப்பற்றிப் பேசுவது சுகமாக இருப்பின், நீங்கள் அதைப்பற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டும் அதைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டும் கவலைப்பட நிறைய இருப்பதாகப் பெருமிதப்பட்டுக்கொண்டும் இருப்பீர்கள்.

பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் சிறந்த வழி மன இறுக்கம் கவலை போன்ற



மன மயக்க நிலைக்குச் சென்று விடுவது பல சமயங்களில் மனச்சோர்வால் பாதிக்கப்பட்டவர்கள், அந்த நிலையிலேயே சுகமாக இருப்பதற்கு காரணம் அவர்கள் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. அவர்களால் எல்லா விதமான பொறுப்புகளிலிருந்தும் விடுதலை பெற்றிருக்க முடியும்.

ஒரு சின்னக் கதை....

எல்லா வியாதிகளையும் குணப்படுத்தும் ஒரு புகழ்பெற்ற மனிதர் ஒரு கிராமத்திற்கு வந்தார். வெகு சீக்கிரத்திலேயே அவரைச் சுற்றி ஒரு கும்பல் கூடிவிட்டது.

அவர் ஒரு மனிதன். கழுத்தில் தொட்டவுடனேயே அவனுடைய நாட்பட்ட கழுத்து வலியிலிருந்து அவனுக்கு நிவாரணம் கிடைத்தது. இன்னொரு மனிதனைத் தலையில் தொட்டவுடன் அந்தக் கணமே அவன் தலைவலியும் மறைந்து விட்டது. அடுத்து ஊன்று கோலுடன் இருந்த ஒரு மனிதனை நோக்கி நகர்ந்தார். ஆனால் ஊன்றுகோலுடன் இருந்த மனிதனோ விலகிச் சென்று

### ஆன்மீகம் 113

என்னைத் தொட்டு விடாதீர்கள் என்று சொன்னான். குணப்படுத்துபவர் குழப்பமடைந்து ஏனென்று வினாவினார். அதற்கு அவன் சொன்னான் நான் உடல் ஊனமுற்றவர்களுக்கான நலதிட்டத்திற்கு விண்ணப்பித்திருக்கிறேன்.

(சிரிப்பு)

நாம் நமது பிரச்சினைகளைப் பற்றி முடிவில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு ஒரு உடனடி தீர்வு கொடுக்கப்படும்பட்சத்தில் அதை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கிறது. ஒரு உடனடித் தீர்வு கொடுக்கப்படும் பட்சத்தில் உடனே நமக்குள் ஒரு பெரும் வெறுமையை உணர்கின்றோம்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணக்க அரசியல் மூலமே எதையும் சாதிக்க முடியும்

## அமைச்சர் டக்ளஸ் பாரதிராஜாவுடனான சந்திப்பில் சுட்டிக்காட்டு

**எதிர்ப்பரசியலால் எதையும் செய்யமுடியாது என்ப துடன் இணக்க அரசியல் மூலமே எதையும் சாதிக்க முடியுமென ஈழம க்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமை ச்சருமான டக்ளஸ் தேவானந்தா தென்னிந்திய திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் ரில்ஹோ விடுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இயக்குநர் பாரதிராஜாவை நட்பின் நிமிர்த்தமாக நேற்று. சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், 1987 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அப்போதே நாம் சுயநிர்ணய உரிமையைப்பெற்றுக்கொள்ளமுடிந்திருக்கும். அத்துடன் அப்போது அதனை எதிர்த்தவர்கள் இப்போது மாகாண சபைமுறைமையை ஏற்றுக்கொண்டதானது காலம் கடந்த ஞானமாகும்.

அரசில் அங்கம் வகித்திருப்பதன் காரணமாக நான் எதையும் நியாயப்படுத்தவில்லை. பிழைகள் இருப்பின் அதை தெரியப்படுத் துமிடத்து அதனை சரிசெய்யவும்நாம் தயாராகவிருக்கின்றோம்.

கடந்த காலங்களில் எதிர்ப் பரசியலால் எமது மக்களுக்கு எவையும் கிடைக்கவில்லை. அந்த நிலையில் தான் நாம் இணக்க அரசியலை தெரிவு செய்து அரசுடனான நல்லுறவைப் பயன்படுத்தி மக்களுக்கானவற்றை பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

இது இணக்க அரசியல் மூலம் எதையும் செய்யமுடியுமென்பது



டன் செய்யலாம் என்பது குறித்தும் நாம் நம்புகிறோம்.

ஐநாவில்தமிழ்மொழியில்பேசிய ஒரேயொரு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எனத் தெரிவித்த அமைச்சர் இதனூடாக அவரது உணர்வு வெளிப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா,யாழ்.மாநகரசபை முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர். (இ-5)

# பக்கச்சார்பாகச் செயற்படும் ஊடகங்கள் மீது நடவடிக்கை

## தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

ஊடங்கள் பக்கச்சார்பின்றி செயற்படவேண்டும். அரச ஊடகங்கள் ஒருபக்கம் சார்பாக செயற்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறான ஊடகங்களுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

அவற்றை மீறிய ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன். எதனை, எங்கே, எப்படி நிறுத்துவதென்று எனக்கு தெரியும் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு மட்டுமல்ல வாக்களிப்பு முடிந்த பின்னரும் அவை தொடர்பான முடிவுகளை முறையாகவும் சரியாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் தேர்தல், தேர்தலாக இருக்கும்.

தேர்தல் பெறுபேறுகளை வெளியிடும் போது ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். ஆனாலும் தேர்தல்கள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படாத எந்தவொரு தேர்தல் முடிவுகளையும் வெளியிட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வாக்கெண்ணும் நிலையங்களில் இருந்து வெளியாகும் தகவல்களை செய்திகளாக்கவேண்டாம். அவ்வாறு உத்தியோகப்பற்றற்ற முடிவுகள் வெளியிடப்படுமாயின் வாக்கெண்ணும் பணிகள் உடனடியாக நிறுத்தப்படும். அவற்றை எவ்வாறு நிறுத்துவதென்பது எனக்கு தெரியும்.

ஏதாவது ஒரு வாக்கெண்ணும் நிலையத்திலிருந்து உத்தியோகப்பற்றற்ற முறையில் தேர்தல் முடிவுகள் வெளியானால் அவ்வாறான செய்திகளை வெளியிடும் நிறுவனங்களுக்கு தேர்தல் பெறுபேறுகளை வெளியிடும் உரிமை முதலில் நிறுத்தப்படும்.

வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து பெறுபேறுகள் வெளியானமை தொடர்பில் முதலில் பொலிஸ் விசாரணை நடத்தப்படும். விசாரணை நிறைவடைந்ததன் பின்னரே வாக்குகள் மீண்டும் எண்ணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# ஆளும் கட்சியிலுள்ள பலர் கடும் அதிருப்தி நிலையில்!

## வசந்த சேனாநாயக்க தெரிவிப்பு

ஆளும் கட்சியின் பலர் கடும் அதிருப்தியுடன் இருக்கின்றார்கள் என அண்மையில் எதிர்க்கட்சியில் இணைந்து கொண்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்டு வருகின்றோம்.

மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினால் புதிய கட்சியொன்றை அமைப்பார் என அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களிடம் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் மைத்திரிபால சிறிசேன கடமையாற்றுவார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை கட்சியை விட்டு விரட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்ட திட்டமே, ஜனாதிபதியே கட்சியின் தலைவராக பதவி வகிக்க வேண்டும் என்பது. எனவே இந்த வழிமுறையைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.

கொள்கைகளை மதிக்கும் நேர்மையான அரசியல்வாதிகள் ஆளும கட்சியில் இருக்கின்றார்கள்.

மாற்றமொன்றை எதிர்பார்த்து இளைஞர்கள் மைத்திரிபால சிறிசேனவை சூழ்ந்து கொண்டுள்ளனர.

மைத்திரிபால சிறிசேன தேர்தலில் நிச்சயம் வெற்றியீட்டுவார். இதனை புரிந்து கொண்ட அரசாங்கம் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு கடும் இடையூறு விளைவித்து வருகின்றது.

ஜனாதிபதி தோற்றாலும் இரண்டு ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார் என சொல்லப்படுகின்றது.

நான் நினைத்தேன் ஜனாதிபதி ஓரளவிற்கேனும் புத்திசாலி என்று. எனினும் இவ்வாறான அடிப்படை அரசியில் அமைப்பு விடயங்களைக் கூட விளங்கிக்கொள்ள முடியாதவராக இருக்கின்றார் என வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)


# அன்பினில் அருளும் அஞ்சனை மைந்தன்

"யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ர தத்ர க்ருத மஸ்த காஞ்சலிம
பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
மாருதிம்நமத ராக்ஷஸாந்தகம்".

எங்கெங்கெல்லாம் ஸ்ரீராமன் புகழ்பாடப்படுகிறதோ, ராம நாமம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் அனுக்கிரகிப்பதற்காய் ஆஞ்சநேயப்பெருமான் அன்பொழுக நிற்பார் என்பதுதான் மேலுள்ள ஸ்லோகத்தின் முத்தாய்ப்பு ஆகும. திரேதாயுகத்தில் நிகழ்ந்ததாக சான்றுபகரப்படும் விஷ்ணுவின் ராமவதாரத்தில் அதற்கு வலுச் சேர்க்கும் முகமாய் ஏனைய வானவர்களும் வானரர்களாய் அவதரித்த பொழுது மூலப்பொருளான சிவனின் அம்சமான ருத்திரனின் அருட்சக்தியே அனுமன் அவதாரமாக நிகழ்ந்தேறுகிறது.

கர்மயோகத்தினதும் பக்தி யோகத்தினதும் பெருமையை உணர்த்த உற்பவித்ததே ஆஞ்சநேய வழிபாடாகும்.இந்த வாயுபுத்திரன் சூரியனிடம் ஞானக்கல்வி சகலமும் பயின்று தாசமார்க்கத்தின் வழிநின்று பரமாத்மாவான அந்த ஸ்ரீராமமூர்த்தியை தலைவனாய் இறைவனாய் தியானித்து அவரது தனிப்பெரும் தொண்டனாய் சுவாசிக்கும் தோறும் ராமநாமத்தையே உச்சரித்து பக்தி வழிபாட்டின் பலம்மிக்க உதாரணமாய் திகழ்பவராய் மட்டுமல்ல எப்பொழுதும் எக் காலமும் ராமதாசனாகவே வாழும் வரம்வேண்டி நித்தியமாய் சிரஞ்சீவியாய் வாழும் சிறப்பு பெற்றவர். அதனால்தான் ராமவதார நிறைவுப்பகுதியில் கூட எல்லோருடனும் சேர்ந்து சரயு நதியில் மூழ்கி தன் அவதாரத்தை ராமபிரான் முடித்து கொண்டு வைகுண்டம் புறப்பட தயாராகி ஆஞ்சநேயரை அழைத்தபோது "வைகுண்டத்தில் நீங்கள் ஸ்ரீமந் நாராயணனாக இருப்பீர்கள். எனது ராமனாக காட்சி தரமாட்டீர்கள். எனவே நான் உங்கள் வழிபாடுகளுடன் பூலோகத்திலேயே தங்கி விடுகின்றேன்" என்று சொர்க்கம் கூடபோகாமல் பக்திவழிபாட்டின் உச்சத்தை எமக்கு புரிய வைக்க வழிகாட்டி அருள்பவராக விளங்குகிறார் இந்த மாருதி. அதன் காரணமாகவே என்றும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக போற்றப்படுகின்றார் இந்த ஆஞ்ச நேயப் பெருமான்.

இத்தகைய பேரருள்நிறைந்த தெய்வமான ஆஞ்சநேயப்பெரு



மான் அவதரித்த அற்புத தினமே மார்கழி மூலப்பெருநாளாகும். ஹனுமத்ஜெயந்தி என்று இந்நாளில் உலகெங்கும் உள்ள ஆஞ்சநேயர் ஆலயங்களிலும் ஏனைய விஷ்ணு ஆலயங்களிலும் மாருதிப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

அதுபோல இலங்கையின் வடபால் வையம் போற்றும் புண்ணிய பூமியாம் யாழ்ப்பாணத்தில் கலை செழிக்கும் இணுவில் கிராமத்தில் மருதனார்மடத்தில் உறைந்திருக்கும் தனிப்பெரும் ஆலயமான அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானத்திலும் ஹனுமத் ஜெயந்தி விழா பெருஞ்சிறப்பாய் நிகழ்ந்தேற இருக்கிறது.

உள்நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் பெருந்திரளான பக்த அடியவர்களின் துணையுடன் விசேட திரவ்விய கலச சங்காபிஷேகங்களும் மாபெரும் பிரார்த்தனை பொங்கல் நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகி இருப்பதுடன் நண்பகல் அளவில் ஆஞ்சநேயப் பெருமான் பூரண சந்தன அலங்கார பூஷிதராய் வெற்றிலை மாலைகள், வடைமாலைகள் அணிந்த வசீகரரூபராய் காட்சிதர அவருக்கு வேதமந்திர, ஸ்தோத்திரவந்தன பாராயணங்கள் நாத, கீத இசையாராதனைகள் திருவாய்மொழி பாசுர சமர்ப்பணங்கள் இடம்பெற்று அடியார் திருக்கூட்டத்தின் ராமநாம ஒலிகள் முழங்க விசேட பூஜைகள். ஆராதனைகள் நிகழ்ந்தேறவும் அந்த அஞ்சனை சுதனின் திருவருள் சித்தித்திருக்கிறது. எனவே இப்புண்ணிய தருணத்தில் அனைவரும் கலந்து கொண்டு பாவப்பிணியகன்ற அருள்வாழ்வும் ஹனுமத் பிரவாகத்தில் நனைந்து புண்ணியப் பேறுபெறும் பெருவாழ்வும் பெற்றுய்ய பிரார்த்திக்கின்றோம்.

முழுநம்பிக்கை கொண்டு மனமுருகி வழிபடும் அடியவர்களுக்கெல்லாம் கவலைகளும் துயரங்களும் நீங்கிய ஆனந்த பேரின்பத்தை வாரிவழங்கும் எங்கள்' மாருதி, பக்த ஆஞ்சநேயராய், பஞ்சமுக ஆஞ்சநேயராய், கையில் கதை தாங்கிய ஜெயவீர ஹனுமந்தனாய், நாளும் தவமியற்றும் யோகமாருதியாய், சஞ்சீவி மலையேந்திய சிரஞ்சீவியாய் என பல வடிவங்களில் மட்டுமல்லாது ராமநாமம் சொல்லும் எம்மூச்சில் கலந்த காற்றின் வடிவமாயும் என எங்கும் வியாபித்து வாசம் செய்கின்றார். அத்தகைய பெருந்தெய்வம் இந்தப்பூவுலகையும் அதுசார்ந்த உயிரினங்களையும் என்றும் ரட்சிக்க இன்னும் பிரார்த்திப்போம்.

ஸ்ரீ ராமஜெயம

கவிஞர் கு.வீரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் வடக்கிற்குள் நுழைய முடியாது

## பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியின்றி

**ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்களில் ஈடுபடவுள்ள சர்வதேச கண்காணிப்பாளர்கள் வடக்கிற்கு செல்லும் போது அவர்கள் பாதுகாப்பு அமைச்சிடம் விசேட அனுமதி பெற வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரின் பரிந்துரையின் கீழ் இந்த அனுமதி பெற வேண்டும் என்று இராணுவ பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.**

தேர்தலுக்காக ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள இந்த அனுமதி பெறல நடவடிக்கை நீக்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்தார். எனினும் இதுவரை இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் இருந்து உத்தியோகபூர்வ கோரிக்கைகள் விடுக்கப்படவில்லை.

தேர்தல்கள் ஆணையாளரின் பரிந்துரை இன்றி அனுமதிகள் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இதற்கிடையில பவ்ரல் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் இதுவரை 100 வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கான பரிந்துரையை தேர்தல்கள் ஆணையாளரிடம் இருந்து பெற்றுள்ளன.

இதனை தவிர பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து 60 கண்காணிப்பாளர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சுவரொட்டிகளை அகற்றாத பொலிஸார் மீது நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

சட்டவிரோத தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காத பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

சட்டவிரோத சுவரொட்டிகள், பனர்கள் மற்றும் பதாகைகளை அகற்றும் நடவடிக்கை 95 வீதம் வெற்றியளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நிறைவு பெறும் வரையில் இந்த நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஒருசில பகுதிகளில் தொடர்ந்தும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரப் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் காணப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

அவற்றை அகற்றுவதற்கு தவறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 190 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 60-75 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 450-500 | 420 | 450 |
| தக்காளி | 180-200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 35-40 | 40 | 60 |
| கோவா | 100 | 140 | 160 |
| கரட் | 130 | 200 | 240 |
| பூசணி | 35-40 | 40 | 50 |
| புடோல் | - | 150 | 120 |
| வாழைக்காய் | 60-70 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 110 | 150 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 35-50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 220 | 280 | 200 |
| லீக்ஸ் | - | 300 | 300 |
| பீற்றூட் | - | 200 | 200 |
| கறிமிளகாய் | 200 | 350 | 250 |
| முருங்கைக்காய் | - | 580 | - |
| போஞ்சி | - | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | - | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 15-25 | 60 | 50 |
| தேசிக்காய் | 60-70 | 140 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | - | 180 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 228

பிச்சைக்கார நலச்சங்கம்

காலேஜ் போக பைக்- மொபைல்- டிப் டாப் டிரெஸ்ஸிங், வெட்டி செலவுக்கு பாக்கெட் மணி... இதை பார்த்தாவது கொஞ்சம் திருந்துங்க!!




மாணவர் ஒருவர் வறுமையால் சுடுகாட்டில் பிணம் எரித்து கல்லூரி படிப்பை தொடர்கிறார்!!!

ஜனுஷன் ஜெயபாலசிங்கம்

$$f(x) = a_0 + \sum_{n=1}^{\infty}\left(a_n \cos\frac{n\pi x}{L} + b_n \sin\frac{n\pi x}{L}\right)$$

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$




டொறின் மன்மதநாயகம்

சர்வாதிகாரி ஹிட்லர் ஒரு சமயம் மனநல மருத்துவமனை ஒன்றைப் பார்வையிடச் சென்றார். அப்போது, அங்கிருந்த மனநோயாளிகள் அனைவரும் கோரஸாக, "வாழ்க ஹிட்லர்!" என்ற முழக்கத்தை எழுப்பினர். இது ஹிட்லருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. நாட்டில் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் கூடத் தனக்கு உரிய மரியாதை வழங்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்தமை அவரை சந்தோஷத்தின் உச்சிக்கே அழைத்துச் சென்றது. ஆனால், அந்த கூட்டத்தில் ஒரேயொருவர் மட்டும் முழக்கமிடாமல் அமைதியாக இருந்ததைப் பார்த்தார் ஹிட்லர். உடனே கோபமாக அவரை நோக்கித் திரும்பி, "நீ மட்டும் ஏன் ஹிட்லர் வாழ்க என கூறவில்லை" என்று கேட்டார்.



அதற்கு அவர் மிகவும் அமைதியாக, "நான் நோயாளி இல்லை. இந்த மருத்துவமனையின் டாக்டர்" என்று பதிலளித்தார்.

எஆர் கயுந்தன் துஷி

வீடென்று ஒன்று இருந்தால் அதன் அருகில் மரமொன்று ஒன்று இருக்க வேண்டும் என்பது



குழந்தைகளுக்கு மட்டுமே தெரிகிறது!

இரத்தினசபாபதி பாலராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேதாஜி மரண மர்மம் நீடிக்கிறது?



1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜப்பானியப் படைகள் பர்மாவிலிருந்து வெளியேறுவது என முடிவு செய்தன. பர்மிய அரசின் தலைவர் டாக்டர் பாமா ஏற்கனவே ரங்கூனிலிருந்து வெளியேறிவிட்டார். ஏப்ரல் 20 ஆம் நாள் பர்மாவிலிருந்து ஜப்பானிய இராணுவத் தளபதி ஜெனரல் ஹெயிட் டாரே? கிமுரா நேதாஜியைச் சந்தித்து தாய்லாந்து நோக்கிப் பின்வாங்குமாறு அவரிடம் கூறினார். சில மணி நேரங்கள் அவர் மன்றாடியும்கூட, நேதாஜி அதற்கு இணங்கவில்லை. ரங்கூனிலேயே தங்கியிருந்து பிரிட்டிஷ் படைகளுடன் போராட விரும்புவதாகத் தெரிவித்தார். ஆனால் இந்திய தேசிய இராணுவத்தின் போர்க்குழு கூடி, ரங்கூனிலிருந்து நேதாஜி போராடுவதைவிட அடுத்த கட்டப் போராட்டத்தை தாய்லாந்து அல்லது சீனா, சோவியத் நாடு ஆகிய நாடுகளில் ஏதாவதொன்றிலிருந்து தொடரவேண்டும் என்று தீர்மானித்தது. அதை அவரால் மீற முடியவில்லை.

பின்வாங்கிச் செல்லும்போது நேதாஜி, அடுததக் கட்டப் போராட்டத்தை எங்கிருந்து நடத்துவது என்பது பற்றித் தம்முடைய தளபதிகளுடன் விவாதித்தார். சீனா அல்லது சோவியத் நாடு ஏதாவது ஒன்றிலிருந்து போராட வேணடும் என்று அவர்கள் தெரிவித்தார்களா. 1945 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் பாங்காக் நகரிலிருந்து வானொலிமூலம் பேசும்போது நேதாஜி பின்வருமாறு அறிவித்தார். "இந்த உலகப் போரில் ஜேர்மனி வீழ்ச்சியடையுமானால் அது சோவியத் நாட்டிற்கும் ஆங்கிலோ-அமெரிக்கர்களுக்குமிடையே ஒரு மோதலை ஏற்படுத்தும் அறிகுறியாக விளங்கும். ஏறகனவே, முளைவிட்டுள்ள இம்மோதல் வரப்போகும் நாட்களில் மேலும அதிகரிக்கும். சுதந்திர இந்திய அரசு சர்வதேச நடப்புகளை உன்னிப்பாகக் கவனித்து அவற்றைத் தனது ஆதாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும். நமது வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படை நோக்கம் என்பது பிரிட்டனின் எதிரி இந்தியாவின் நண்பன் என்பதேயாகும்".

மார்ச் 25 ஆம் நாளன்று அவர் ஆற்றிய வானொலி உரையில் பின்வருமாறு குறிப்பிடடார். "ஐரோப்பிய நாடுகளின் தலைவிதிகளைத் தன் கரங்களுக்குள் வைத்திருக்கும் ஒரு மனிதர் ஐரோப்பாவில் உண்டு எனில் அவர் மார்ஷல் ஸ்டாலினே ஆவார். ஐரோப்பிய நாடுகள்மட்டுமல்ல உலகம்முழுமையும் சோவியத் நாடு எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்குமே? அதையே பின்பற்றும்."

**தப்பும் திட்டம்!**

நேதாஜி அமைச்சரவையில் ஒருவரான தாஸ் பின்வருமாறு கூறினார் "இந்திய-சீன எல்லைப்புறப் பகுதிகள் அல்லது திபெத் வழியாக இந்தியாவிற்குள் இரகசியமாக நுழையும் திட்டம் பற்றி ஆராயுமாறு அவருக்கு நேதாஜி ஆணையிட்டிருந்ததாகவும், ஆகஸ்ட் 16 ஆம் நாள் அன்று அத்திட்டம் பற்றி நேதாஜி கேட்டதாகவும" இவர் சொல்லியிருக்கிறார். ஹனோய் சென்று வியட்நாமின் தலைவரான ஹோசிமின் அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி ஆனந்தமோகன் சகாயிடம் நேதாஜி கூறியிருக்கிறார்.

கோஸ்லா கமிஷன் முன் சகாய் அளித்த சாட்சியத்தில் "வியட்நாமின் புரட்சித் தலைவரான ஹோசிமின் மற்றும் அவரது தளபதிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும படி எனக்கு நேதாஜி ஆணையிட்டார். அவ்வாறு அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு எனக்குச் சில காலம் பிடித்தது. ஹோசிமின் மூலமாக சீனக் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொள்ளும்படியும் சீனாவிலுள்ள ஷாங்காய் மற்றும் பல நகரங்களில் இந்திய மையங்களை அமைக்கும்படியும் நேதாஜி கூறினார்" என அவர் தெரிவித்தார். நேதாஜியின் ஆணைப்படி அவர்களுடன் தொடர்பு கொள்ள முடிந்ததா என நீதிபதி கோஸ்லா கேட்டபோது "ஆம். நான் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். ஹோசிமினைச் சந்தித்துச் சில ஏற்பாடுகளும் செய்தேன்" என்று சகாய் பதில் கூறினார்.

**சோவியத் நோக்கி**

சோவியத் நாட்டிற்குத் தப்பிச் செல்ல நேதாஜி வகுத்திருந்த திட்டத்தை நிறைவேற்ற ஜப்பானிய அரசு தயங்கியது. அவ்வாறு செய்வது ஆங்கிலேய- அமெரிக்க அரசுகளின கோபத்தைத் தூண்டிவிடக் கூடும் என ஜப்பானிய அரசு அஞ்சியது. பீல்ட் மார்ஷல் தெராச்சி தனது அரசின் கருத்தினை ஒதுக்கித் தள்ளினார். தமது உற்ற நண்பர் நேதாஜி சோவியத்-மஞ்சூரிய எல்லைப் பகுதிக்குத் தப்பிச்செல்ல எல்லா வகையிலும உதவவேண்டுமென்று தீர்மானித்தார். பர்மாவில் இருந்த ஜப்பானிய இராணுவத் தளபதியான ஜெனரல் சிதேயை மஞ்சூரியாவிற்கு ஜப்பானிய இராணுவத் தளபதியாக நியமித்தார். நேதாஜியை அழைத்துக்கொண்டு அங்குச் செல்லும்படி அவருக்கு ஆணையிட்டார். தளபதி சிதேயை அவர் தேர்ந்தெடுத்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. பிரெஞ்சு, ஜெர்மனி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் அவர் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். சர்வதேசச் சட்டங்களிலும் அவர் நிபுணராக விளங்கினார். எனவே, சோவியத் இராணுவத்திடம் ஜப்பானிய படைகள் சரணடையும் பிரச்சினை ஏற்பட்டால் சோவியத் நாட்டிற்குள் பத்திரமாக நேதாஜி பிரவேசிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவரே தகுந்தவர் என தெராச்சி கருதினார்.

**ஹிரேன் முகர்ஜி மறுப்பு**

இந்தியக்கம்யூனிஸ்டுக்கட்சித்தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி எழுதிய "தகதக" க்கும் தங்க அம்பு" என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். ஜப்பானில் புதிய பிரதமர் கோயிசோவிடம் தமது திட்டம் குறித்து நேதாஜி பேசினார். ஜப்பான்-சோவியத் உறவு அப்போது சீர்கெட்டிருந்தது. அந்த உறவை சீர்படுத்த நேதாஜி முன்வந்தார. நேதாஜியின் இந்த உதவியை ஏற்க ஜப்பான் பிரதமர் தயங்கினார். சோவியத் நாட்டுடன் மேற்கு நாடுகள் கொண்டுள்ள நேச உறவு நிலையற்றது. எனவே, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்குச் சோவியத் நாட்டின் உதவியையும் பெற அவர் எண்ணியிருக்கக்கூடும். ஒருவேளை ஜப்பான் தோல்வியடைந்தால். சோவியத் நாட்டில் அரசியல் தஞ்சம் புக அவர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி இன்னொன்றையும் தமது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். போரில் ஜப்பான் முழுத் தோல்வி அடையுமானால் சோவியத்துக்கோ, சீனாவிற்கோ தாம் சென்று தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த அவர் திட்டம் தீட்டியிருக்கக் கூடும். சோவியத் நாட்டிற்குத் தப்பிச் செல்ல வேண்டும் என்று நேதாஜியும் அவரது அமைச்சர்களும் முடிவுக்கு வந்ததாகப் பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி திட்டவட்டமாக எழுதியுள்ளார்.

நேதாஜியை தப்பவைக்கும் திட்டத்தை நன்கு யோசித்து உருவாக்கியவர்களான ஹிக்கரி ஹிக்கன் தலைவரான லெப். ஜெனரல் ஐசோடா, தெராச்சியின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த கர்னல் தாடா ஆகிய இருவரும் தெரிவித்த விவரங்களிலிருந்து கீழ்க்கண்ட உண்மைகள் நிரூபணமாகியுள்ளன. நேதாஜியின் சம்மதத்துடன் ஜப்பானிய அரசு அவரைப் பத்திரமாக ரஷ்ய எல்லைவரை கொண்டுபோய்விட முடிவு செய்தது. மஞ்சூரியாவிற்கு ஜப்பானியத் தளபதியாக நியமிக்கப்பட்ட ஜெனரல் சிதே நேதாஜியை அழைத்துச் சென்று மஞ்சூரியாவில் ரஷ்ய எல்லையருகே பத்திரமாக விட்டுவிடவேண்டும் என்று ஆணையிட்டது.

இவ்வாறு நேதாஜி ரஷ்யாவிற்குத் தப்பியவுடன் தைகோகூ விமான விபத்தில் நேதாஜி இறந்ததாக அறிவித்துவிடுவது என்றும் ஜப்பான் அரசு முடிவு செய்திருந்தது. ரஷ்யப் பகுதியை நேதாஜி அடையும்வரை இத்தகைய அறிவிப்பைத் தாமதிப்பது என்றும் அது முடிவு செய்திருந்தது. எனவேதான், ஆகஸ்ட் 18ஆம் நாளே விமான விபத்து நடைபெற்றிருந்தும் 5 நாட்களுக்குப் பின்னர் அதாவது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 22ஆம் நாளன்று நேதாஜி மாண்டதாக ஜப்பானிய அரசு அறிவித்தது.

**தனிச் செயலாளர் கருத்து**

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின தனிச்செயலாளராக பணியாற்றிய மேஜர் பாஸ்கரன் பின்வருமாறு கூறினார், தைகோகூ விமான விபத்தில் நேதாஜி சாகவில்லை என்பது உறுதி. ஆனால் அவர் இன்னும் உயிருடன் இருப்பதாக நான் கருதவில்லை. குறிப்பிட்ட விமான விபத்திற்குப் பிறகு அவர் மாண்டிருக்கலாம். ஆனால் எப்போது? எங்கே? எவ்விதம்? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. நேதாஜியின உடல் வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டி 5 அடி நீளம் மட்டுமே இருந்தது. ஆனால நேதாஜியோ 6 அடி 1 அங்குலம் உயரமுள்ளவர். எனவே இந்த சவப்பெட்டியிலிருந்த உடல் ஒரு ஜப்பானிய இராணுவ வீரரின் உடல் என்பது உறுதிப்பட்டுள்ளது. நேதாஜியின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த ஜே.ஹெச்.திவி என்பவருக்கு 17-8-1945 ஆம் ஆண்டு நேதாஜி எழுதிய கடிதத்தில் இறுதியாக குறிப்பிட்டிருந்த வாக்கியம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். "விமானம் மூலம் தொலைதூர பயணத்தை மேற்கொள்ளவுள்ள என்னை விபத்து எதுவும் எதிர்கொள்ளாது என்பதை யார் அறிவார்?" என்று குறிப்பிட்டுள்ளார். நடக்கப்போகும் விமான விபத்து பற்றிய செய்தியை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார் என்பதற்கு இது சான்றாகும்.

**மவுண்ட் பேட்டன் குறிப்பு**

மௌண்ட் பேட்டன் நாட்குறிப்பில் இன்னொரு இரகசியச் செய்தி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது: "தென்கிழக்கு ஆசியாவைப் பிரிட்டிஷ் படைகள் மீண்டும் கைப்பற்றிய பிறகு ஜப்பானியர் வசமிருந்த முக்கியமான இராணுவ ஆவணங்கள் எதையும் அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. அதாவது சரணாகதி அடைவதற்கு முன்பாகவே தங்கள் வசமிருந்த இராணுவ-அரசியல் ஆவணங்கள் அனைத்தையும் அழித்துவிட்டார்கள். ஆனால் பாங்காக் நகரிலிருந்த ஹிக்கரி கிக்கன் அலுவலகத்தின் சில இரகசியச் செய்திகள் மட்டும் பிரிட்டிஷ் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. செய்கோனிலிருந்த இராணுவத் தலைமையகத்திலிருந்து இச்செய்திகள் அனுப்பப்பட்டன.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 17ஆம் நாள் நேதாஜி செய்கோனிலிருந்து புறப்பட்டதை ஒரு செய்தி கூறுகிறது. பாங்காக்கிலுள்ள இந்தியர்களுக்கு போஸின் வருகையைத் தெரிவிக்கும்படி ஹிக்கரி கிக்கன் செய்கோன் தலைமையகம் ஆணையிட்டது. ஆகஸ்ட் 20ஆம நாளிட்ட மற்றொரு செய்தி தைகோகூ விமான நிலையத்தில் போஸ் விமானம் விபத்துக்குள்ளாகி அவர் இறந்த செய்தியையும் அவர் உடல டோக்கியோவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட செய்தியையும் தெரிவிக்கிறது. போஸின் மரணம் பற்றிய செய்தியை இந்திய மக்களுக்கு தெரிவிக்கும்படி மூன்றாவது செய்தி கூறுகிறது.

"நேதாஜியின் உதவியாளர் கர்னல் ஹபிபூர் ரஹ்மான் விமான விபத்தில் படுகாயமடைந்துள்ளார் என்றும் அவர் உடல்நிலை பற்றியும் நான்காம் செய்தி விவரிக்கிறது. இந்த நான்கு இரகசியச் செய்திகளையும் பிரிட்டிஷ இராணுவம் கைப்பற்றியது. உளவுத்துறை அதிகாரிகள் இவற்றை ஆராயந்து ஒரு அறிக்கையை மவுண்ட் பேட்டனுக்கு சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"கீழ்க்கண்ட காரணங்களால் இம்மரணச் செய்தி என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பொய்ச் செய்தி என்று அவர்கள் கருதினார்கள்.

1.பாங்காங், செய்கோன் ஆகிய இடங்களிலுள்ள சகல ஆவணங்களையும் அழித்துவிட்ட ஜப்பான் இந்த ஒரே ஒரு கோப்பை மட்டும் அதிலும் இந்த நான்கு முக்கியச் செய்திகளையுள்ளடக்கிய கோப்பினை அப்படியே விட்டுவைத்திருப்பது சந்தேகத்தைக் கிளப்புகிறது. சுபாஷ் போஸின் பயணம் பற்றிய செய்திகளை முன்னதாகவே இந்திய தேசிய இராணுவ அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தெரிவித்திருப்பது அவருடைய மரணம் பற்றிய செய்திகளின் முன்னறிவிப்பு நடவடிக்கைகளுக்காகவே எனக் கருதப்பட வேண்டும்.

2.பார்மோசாவில் போஸ் இறந்தார் என்று ஜப்பான் முதலில் கூறியது. பிறகு ஜப்பானில் இறந்தார் என்று மறுபடியும் கூறியது. இந்த இரண்டு செய்திகளும் உண்மையாக இருக்க முடியாது. அதிகாரிகள் இதுபற்றி மேலும் கூறுகையில் அனைத்து நிகழ்ச்சிகளும் பலமான சந்தேகத்தை எழுப்புகின்றன. போஸ் சென்ற விமானத்தில் அவருக்கு இரண்டு இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டன என்று கூறப்பட்டது. போஸ் போன்ற மிக முக்கியமான தலைவர் தனி விமானம் ஒனறில செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமே தவிர இப்படிச் செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்க முடியாது.

போஸின் இறுதிச் சடங்குகளும் அதைப் பற்றிய விவரங்களும் மேலும் சந்தேகத்தை எழுப்புகின்றன. டோக்கியோவுக்கு போஸ் உடல் எடுத்துச்செல்லப்பட்டதாக இரகசியச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் போஸின் மரணச் செய்தியை ஒலிபரப்பிய டொமய் ஏஜன்சி போஸ் பார்மோசாவில் இறந்ததாகவும், அவருடைய உடல் அங்கேயே எரிக்கப்பட்டதாகவும் கூறியது.

ஆனால் போஸின் உதவியாளர் தைகோகூவில் அவர் இறந்ததாகவும் அங்கே அவர் உடல் எரிக்கப்பட்டதாகவும் கூறுகிறார். இந்த முரண்பாடுகள் ஐயத்தை உண்டாக்குகின்றன. போஸ் புறப்பட்டது நிச்சயமான செய்தியாகும். ஆனால் தைகோகூ விமான விபத்து என்பது கட்டுக்கதையாகும். அங்கிருந்து போஸ் வேறு எங்காவது தப்பிச் சென்றிருக்க வேண்டும். திகைப்பூட்டும் தகவல்கள் "உள்நாட்டிலிருந்து கிடைத்தள்ள இந்தத் தகவல்கள் எவ்வளவு திகைப்பூட்டுவனவோ அதைப் போலவே வெளிநாட்டுத் தகவல்களும் திகைப்பூட்டுகின்றன. 1947 ஆம் ஆண்டு சனவரி 7 ஆம் நாள் வெளியான பிரவ்தா பத்திரிகை ரஷ்யாவில் போஸ் இருப்பதாகக் கூறப்படும் செய்தியை மிகக்கடுமையாக மறுத்தது.

டிசம்பர் மாதத்தில் வெளியான ஒரு செய்தியில் ஆப்கான் மாநில கவர்னராக இருந்த கோலட் என்பவரிடம் காபூலிலிருந்த ரஷ்யத் தூதுவர், "மாஸ்கோவில் பல காங்கிரசு கைதிகள் இருக்கிறார்கள். அவர்களில் போஸ் ஒருவர் ஆவார் என்று கூறினார்" என ஒரு செய்தி கூறுகிறது. ஈரானின் தலைநகரான டெக்ரானிலிருந்த ரஷ்யத் தூதுவர் ரஷ்யாவில் போஸ் இருப்பதாக கூறினார். மார்ச் மாதத்தில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து வெளியான இச்செய்தியை பிரிட்டிஷ் உளவுத்துறை மிகத் தீவிரமாக விசாரித்தது. ஆனாலும் மாஸ்கோவில நேதாஜி இருப்பதாகக் கூறப்பட்ட செய்தியை அவர்களால் உறுதி செய்ய முடியவில்லை.

ஜப்பானிய உயர் இராணுவ அதிகாரிகள், இந்திய தேசிய இராணுவத் தளபதிகள், சுதந்திர இந்திய அரசின் அமைச்சர்கள் உள்பட பல முக்கியமானவர்களை பிரிட்டிஷ் இராணுவம் கைது செய்தது. தென்கிழக்கு ஆசியாவில் இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரையும் பிரிட்டிஷ் உளவுத்துறை அதிகாரிகள் மிகக் கடுமையாக விசாரணை செய்தார்கள்.

*தொடரும்*

*-பழநெடுமாறன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகினாலும் இணையேன்

## மேர்வின் சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜாபக்ஷவின் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ள பல அமைச்சர்கள் விலகி வரும் நிலையில் ஐ.தே.க.கூட்டணியுடன் உருவான பொது எதிரணிக்கு ஆதரவு வழங்கி மகிந்தவுக்கு அதிர்ச்சியை கொடுத்து வரும் வேளையில் ஜனாதிபதி மகிந்தவின் தீவிர விசுவாசியும் அவரின் கட்டளைக்கு அடிபணிந்து நடப்பவருமான பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தான் அரசாங்கத்திலிருந்து விலகினாலும் எதிர்க்கட்சிக்கு செல்லப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினர் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளதாக மேர்வின் தெரிவித்தார்.

தாம், அமைதியாக இருப்பதை கண்டு சிலர் எதிர்க்கட்சிக்கு மாறப் போவதாக கூறுவதாகவும் மேர்வின் தெரிவித்தார்.

ஆனால் நான் ஜனாதிபதி மகிந்தவின் அரசை விட்டு ஒரு போதும் விலகமாட்டேன். அவ்வாறு விலகினாலும் பொது எதிரணியுடன் இணையமாட்டேன் எனவும் மேர்வில் சில்வா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமது மகன் வெளிநாட்டு தம்பதியினரை தாக்கிய சம்பவத்தை அடுத்து மேர்வின் அரசியலில் அதிக அக்கறை கொள்ளாதவராக இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தொண்டமான் வாக்குறுதியளித்தாலும் மக்கள் ஜனாதிபதி மகிந்தவுக்கு வாக்களிக்கமாட்டார்கள்

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வாக்குறுதியளித்தாலும் பெருந்தோட்ட மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இம்முறை வாக்களிக்கமாட்டார்கள் என மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி நிச்சயமாகிவிட்டது.

பெருந்தோட்ட தமிழ் மக்களின் 80 முதல் 90 வீதமான வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவிற்கு கிடைக்கும்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு அரசாங்கம் எதனையும் வழங்கவில்லை.

பெருந்தோட்ட மக்களுக்கு புதிய வீடுகள் தேவை, அவர்கள் இன்னமும் 200 ஆண்டுகள் பழைமையான லயன் அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

பெருந்தோட்டப் பகுதியில் இருககும் ஒரு தேசிய பாடசாலையை பெயரிட முடியுமா? ஒன்று கூட கிடையாது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பழைமையான தொழிற்சங்கம் என்ற போதிலும் அவர்கள் மக்களுக்காக என்ன செய்துள்ளார்கள்.

நாம் சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளேயாகும். தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்க முடியும். எனினும் அவர்கள் அவ்வாறு எதனையும் இதுவரையில் செய்ததில்லை.

தொண்டமான் என்ன சொன்னாலும் பெருந்தோட்ட மக்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கே ஆதரவளிப்பார்கள்.

முஸ்லிம் காங்கிரஸின் நிலைமையும் அதுவே, முஸ்லிம் மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என ராதாகிருஸ்ணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# விபத்தில் சிறுவன் பலி; எட்டுப் பேர் படுகாயம்!

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள மட்டக்களப்பு- மூதூர் சந்தியில் பேருந்து ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐந்து வயதுக் குழந்தை ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன் பேருந்தில் பயணித்த எட்டுப் பேர் படுகாயங்களுக்குள்ளானதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பலியான சிறுவன் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாதுறையைச் சேர்ந்த ஜெயப்பிரதீப் மயூரேஸ் (வயது-5) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த சாரதி உட்பட எட்டுப்பேரும் உடனடியாக மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பலியான சிறுவனின் தந்தை ஜெயப்பிரதீப் படுகாயமடைந்த நிலையில் அவசர சத்திர சிகிச்சைக்காக திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மூதூர் வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிவில் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது குடும்பத்தினருடன் சுமார் இருபது 30 பேர் மட்டக்களப் பிலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலாச் சென்று மீண்டும் மட்ட க்களபபுக்குத் திரும்பிக் கொண் டிருந்த வேளையில் மட்டக்களப்பு-மூதூர் சந்தியில் மேற்படி தனியார் பேருந்து மரத்துடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாக சுற்று லாச் சென்றவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சட்டங்களை மீறியுள்ளார்

அரச பணியாளரான நிதியமைச்சின் செயலாளர் பீ.பி.ஜெயசுந்தர தேர்தல் சட்டங்களை மீறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி உதவி தலைவர் ரவி கருணாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மனநிலையும்

"ஒரு 20 அடி நீளம், 18 அடி அகலமும் உள்ள அறையொன்றினுள்ளே இரு நபர்களை வைத்து பூட்டுங்கள்", அவர்களுக்கும் வெளியுலகத்திற்கும் எதுவிதமான தொடர்புகளும் இருக்கக் கூடாது.

அனைத்தையும் துண்டிக்க வேண்டும். ஓரிரு மாதங்கள் வரை அவர்களை வெளியிலேயே விடக்கூடாது. இப்படியாகச் செய்தால், ஒரு கொலை நடைபெறுவதற்கான சூழ் நிலையை உருவாக்கிவிட்டது என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் எழுதி வைத்திருந்த தினசரி குறிப்பேட்டில் இவ்வாறு இருந்தது. அவர் பெயர் வாலரி நியுமின். இவர் 1980 ஆம் ஆண்டு இன்னொருவருடன் கூட விண்வெளிக்குப் போய் திரும்பி வந்தவர்.

ரொக்கெட்டிலே விண்வெளிக்குச் சென்று சிறிது நாட்கள் அங்கே இருந்து விட்டு திரும்பி வரும்போது அவர்களது மனநிலை மிகவும் பாதிப்படைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொக்கெட்டிலே மிகவும் துணிச்சலாகத்தான் புறப்படுகிறார்கள். இருந்தாலும் ரொக்கெட் பயணிக்கும் பாதையோ எல்லையில்லாமல் பரந்துகிடக்கும் வானமாகும்.

அங்கே என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. எந்தக் கணனியென்றாலும் அதைத் துல்லியமாகக் கணக்கு சொல்லாது பயணிக்கு ரொக்கெட்டில் ஏதாவது கோளாறு நேர்ந்தால் வீதியில் ஓரமாக நிறுத்தி பழுதுபார்க்க முடியுமா? போனால் போனதுதான்.

சுவாசிப்பதற்கு போதியளவு வளி கிடைக்காது. பகல் என்றால் வெப்பமாகவும், இரவென்றால் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருள் சூழ்ந்தும் காணப்படும்.

இது மாதிரியான அபாயத்தை மனதிலே சுமந்து கொண்டுதான் விண்வெளிவீரர்கள் ரொக்கெட்டிலே பயணிக்கிறார்கள்.

ரொக்கெட் எவ்வளவு பெரியது? ஒரு சிறிய கூடுதான் விண்வெளிவீரன் அமரும் இடமாக அமைந்திருக்கும். உள்ளே இருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையில் இருந்து தான் பதில் வரவேண்டும்.

1982 இலே இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்திலே புறப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் விண்கலத்தினுள் அடி வைத்ததிலிருந்து பேசுவது கிடையாது. மிகவும் அவசியம் என்றால், ஓரிருவார்த்தைகள் பேசிக்கொள்வார்கள். இப்படியாக புழுக்கமான, இறுக்கமான மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளி வீரர்கள் 211 நாட்களைக் கடத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படியாக பல்லைக் கடித்துக்கொண்டு, 211 நாட்களையும் விண்ணிலே செலவு செய்து விட்டு, தப்பினோம், பிழைத்தோம் என்று மீண்டும் பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இருவரில் ஒருவர் தான் இதையெல்லாம் தனது தினக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இக் குறிப்பேடு 1983 ஆம் ஆண்டிலே சோவியத் யூனியனிலே புத்தகமாக வெளிவந்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மீண்டும் பூமியில் தரை இறங்கியதும் அவர்கள் இரத்தப் பரிசோதனைக் குட்படுத்தப்படுவர். அப்போது ஹைட்ரோ கார்ட்டிடுசோன், காட்டிகோலமன் ஆகிய வேதியல் பொருட்கள் இவர்களது உடம்பில் சுரந்து இருப்பது கண்டறியப்படும்.


இந்த வேதியியல் பொருளானது ஒரு சாதாரண மனிதன் பதட்டமடையும் போது ஏற்படுகிறது.

பின்னர் அவர் ஓய்வெடுக்கும்போது...... இப்பொருள் இயல் பாகவே மறைந்து விடும். ஆனால் விண்வெளி வீரர்களின் இரத்தத்திலே இது எப்போதுமே இருக்கிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் செயற்பாட்டில் முக்கிய பங்காற்றும் "ஞாபக சக்தி"



...நீண்டநாள் ஞாபகசக்தி மிகவும் அத்தியாவசியமானதாகும். தொழிற்படு ஞாபகமானது இதிலிருந்தே தகவல்களையும் பொறிமுறைகளையும் பெற்று எம்மை தொழிற்பட வைக்கிறது. எமது மூளை, காட்சிகள் படங்களாகவே ஞாபகத்தைப் பேண விரும்புகிறது.

ஒரு நபரை நினைத்துப் பாருங்கள். அவரது உருவம் உடனடியாகப் படமாக ஞாபகம் வரும். அவரது செயல்கள், குறிப்பிடத்தக்க இயல்பு


மாணவரிடையே மறதி பாரிய பின்னடைவை ஏற்படுத்துகிறது. இதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று பார்ப்போம்.


நாம் கற்கும் பாடங்கள் மறந்து போகாமலிருக்க எவ்வாறு மீட்டல் செய்யவேண்டும் என நரம்பியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். நீண்டகால ஆராய்ச்சிகளின் பின், ஆகக் குறைந்தது எவ்வளவு நாளுக்கொரு தடவை, எவ்வளவு நேரம் மீட்டல் செய்ய வேண்டும் என முடிவுக்கு வந்துள்ள


பழகுதல் வேண்டும். தகவல்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் பார்த்தலும் மிக இலகுவாக ஞாபக சக்தியைக் கூட்டிக் கொள்ளலாம்.


மாணவர்கள் இந்த ஞாபக சக்தியினை நம்பியே முதல்நாள் அல்லது காலையில் படித்து விட்டுப் பரீட்சை எழுதுகின்றனர. நீண்டகால ஞாபகசக்தியை வளர்க்க மீட்டலுடன் போதிய உறக்கம் அவசியம் அதிக நித்திரை விழித்தல் ஞாபகசகதியைப் பாதிக்கும்.

ஆழ்ந்த உறக்கத்திலேயே தற்காலிக ஞாப









யாவும் காட்சிகளாகத் தோன்றும். அதேபோல, ஒரு இலக்கத்தை நினைத்துப் பாருங்கள் அந்த இலக்கம் ஞாபகத்திற்கு வரும். எனவே, முடிந்தளவு படங்களாகவும் காட்சிகளாகவும் தகவல்களை ஞாபகம் வைத்திருக்கப் பழக வேண்டும். இங்கு தான் கட்புல செவிப்புல சாதனங்கள் உதவுகின்றன.

இது இவ்வாறிருக்க, எமது ஞாபகசக்தி தொழிற்படும் விதத்தை சுருக்கமாகப் பின்வருமாறு காட்டலாம். உறக்கத்தின் போதே ஞாபகசக்தியானது பலமடைகின்றது (consolidation). நரம்புப் பிணைப்புகள் உறுதியும் பலமும் அடைகின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் (deep sleep / Rapid Eye Movement (REM) sleep) இவ்வாறு நிகழும் போதே கனவு தோன்றுவதாகக் கருதப்படுகின்றது..

நீண்டகால ஞாபகத்திலிருந்து சில தகவல்களை விரைவாகப் பெற்றிருப்போம். மீண்டும் மீண்டும் எம்மால் பயன்படுத்தப்படும் தகவல்கள் விரைவாகக் கிடைக்கும். நீண்டநாள் பாவிக்காது விட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட நேரம் எடுக்கும். ஞாபகத்திற்குக் கொண்டு வர முயன்ற பெயரோ சம்பவமோ நீண்ட நேர இடைவெளியில் திடீரென ஞாபகத்திற்கு வரும். அப்போது நாம் வேறொரு விடயத்தில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருப்போம். அதுவரை எம்மையறியாது எமக்காக எமது மூளை அத்தகவலை நீண்டநாள் ஞாபகத்தில் எங்காவது இருக்கிறதா எனத் தேடிக்கொண்டிருந்திருக்கும்.


**ஞாபக மறதி (forgetting)**

பல தேவையற்ற பாதகமான விடயங்களைக் காலப்போக்கில் மறந்து போகும் வரம் இறைவனால் எமக்கு வழங்கப்பட்டதாலேயே நாம் நிம்மதியாக வாழ்கிறோம். ஆனாலும் தேவையானவை மறந்து போதல் பாதகமானதே. இங்கு நோய்களால் ஏற்படும் ஞாபகமறதியினைக் குறிப்பிடவில்லை.

குறிப்பாக பாடசாலை மற்றும் பல்கலைக்கழக

னர். நாம் சராசரி மாணவர்களாயின் நாம் கற்ற பாடங்கள் 30 நிமிட நேரத்தில் 50 வீதம் மறக்கத் தொடங்கி 1 மணி நேரத்தில் 40 வீதத்திற்கு மேல் குறைவடைந்து 24 மணி நேரத்தில் 20 வீதத்திலும் குறைவாகவே ஞாபகம் நிற்கும்.

இதனைத் தவிர்க்க 2 ஆம் நாள் 10 நிமிடமும் 7 ஆம் நாள் 5 நிமிடமும் 30 ஆம் நாள் 2-4





நிமிடமும் மீட்டால் கற்ற பாடங்களை மறக்காது ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். எனவே, ஆரம்பத்தில் படிக்காது விட்டு கடைசிநேரத்தில் ஒரேயடியாகக் கற்பதில் பயனில்லை. கற்கின்றபோதே உடனே மீட்டு வந்தால் இறுதியில் வருந்தத்தேவையில்லை.

மேலும், ஆசிரியர்களும் இதனைக் கருத்திற் கொண்டு நேரசூசிகை தயாரித்தால் நன்றாக இருக்கும். கற்பிக்கின்ற முறை கவர்ச்சிகரமானதாக (கற்பித்தல் துணைச் சாதனப் பயன்பாடு) அமைகின்றபோதும், இது எமக்கு மிகவும் அவசியம் என மாணவர்கள் உணர்கின்ற போதும் கவனம் எடுக்கின்றனர். இதனால் புலன் ஞாபகம் உருவாகி இறுதியில் நீண்டகால ஞாபகசக்தி கூடுகின்றது. கற்கும் சூழல் விரும்பத்தக்கதாக அமைதலும் அவசியம்.

குறுகிய தொழிற்படு ஞாபகத்தினை வளர்த்துக் கொள்ள மனப்படங் காணுதல் (visualization) அல்லது ஒத்திகை (rehearsal) மிக அவசியம். தகவல்களை அர்த்தமுள்ள துண்டுகளாக்கிப்

கத்திலிருந்து நிரந்தர ஞாபகத்திற்குத் தகவல்கள் இடமாற்றப்படுகின்றன. இதன்மூலம் தற்காலிக ஞாபகத்தினை சேகரித்து வைக்கும் மூளையின் பகுதியிலிருந்து தகவல்கள் அகற்றப்பட, அதன் கொள்ளளவு மீண்டும் பழைய நிலைக்கு அதிகரிக்கிறது. இதனை ஒரு "pendrive" இன் தகவல்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு மீண்டும்




அப் "pendrive" இனை பூரண கொள்ளளவுடன் பயன்படுத்தவதற்கு ஒப்பிடலாம்.

எனவே, புதிய தகவல்களைக் கற்பதற்கு முன் ஆகக்குறைந்தது 7 மணித்தியால ஆழ்ந்த தூக்கம் அவசியம். அப்பொழுதான் அடுத்தநாள் கற்பவற்றை முடிந்தளவு எமது மூளையில் ஏற்றிக் கொள்ளலாம். அதே போல் கற்றதன் பின் போதிய ஆழ்ந்த தூக்கம் இருந்தால் மட்டுமே நாம் கற்றவை நீண்டகால ஞாபகத்தில் நல்ல உறுதியுடன் சேமித்து வைக்கப்படும்.

படுக்கையில் படுத்திருந்தால் போதாது ஆழ்ந்த உறக்கமாக இருக்க வேண்டும். ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் படித்தல் மிகவும் அவசியம். இன்றைய ஆராய்ச்சி முடிவுகளின்படி நல்ல ஞாபக சக்தியுள்ளவர் என்போர் நல்ல தொடர்புபடுத்தக் கூடிய ஆற்றல் உள்ளவர்களே (good associato

Dr. S.கண்ணதாசன்
யாழ்.பல்கலைக்கழகம்

rs) ஆவார்.

மேலும், உடலையும் மூளையையும் நல்ல ஆரோ க்கியமான நிலையில் பேணுதல் வேண்டும். ஆரோக்கியமான நிறையுணவு, போதிய உடற்பயிற்சி, நகைச்சுவை உணர்வு போன்றன ஞாபகசக்தியைத் தூண்ட உதவும் மூளையானது எமது உடல நிறையில் 2 வீதமே இருக்கின்ற போதிலும் எமது சக்திப் பயன்பாட்டில் 20 வீதத்தினைப் பயன்படுத்துகின்றது.

எனவே, நாம் சிறந்த முறையில் மூளையினைப் பயன்படுத்தி ஞாபகசக்தியினைக்கூட்ட வேண்டுமெனில் போதியளவு குளுக்கோசும் ஒட்சிசனும் மூளைக்குக் கிடைக்க வேண்டும். ஆகவே, மாணவர்களும் ஏனையோரும் காலையுணவு கட்டாயம் உண்பது அவசியம்.

உடலிற்கும் பயிற்சி செய்வதுபோல மூளைக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். எவ்வாறு தசைகள் பலம் பெறுமோ அவ்வாறே மூளையும் பலம் பெறும். சதுரங்கம் குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்றன மூளைப் பயிற்சிக்கு உதாரணங்களாகும்.

இறுதியாக, **"ஞாபகசக்தி"** என்பது பரம்பரை சார்ந்தது அன்று. சூழலின் தாக்கம் மற்றும் எமது முயற்சி என்பவற்றிலேயே தங்கியுள்ளது. முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. எனவே, நாமும் நல்ல ஞாபகசக்தியுள்ளவராகி வாழ்க்கையிலே ஏன் முன்னேறக்கூடாது?

(முற்றும்)








"இயக்குநர் இமயம்" என போற்றப்படுபவரும் ஈழத் தமிழரின் நியாயமான போராட்டங்களுக்குத் தொன்றுதொட்டு ஆதரவு வழங்கி வருகின்ற இன உணர்வாளருமான பாரதிராஜா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது அவரை கௌரவிக்கின்ற நிகழ்வு ரில்ஹோ விடுதியில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலாவதியான காஸா போர்முனை யுத்த நிறுத்த ஒப்பந்தம்

# மீண்டும் போர் ஆரம்பமானது

இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கு இடைப்பட்ட காஸா பகுதியில் இடம்பெற்று வந்த கடும் மோதல் பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலியெடுத்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் மீண்டும் போர் ஆரம்பித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



காஸாவில் 50 நாட்களுக்கும் மேலாக நடந்து வந்த போரானது, கடந்த ஒகஸ்ட் மாதம் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதையடுத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை திரும்பி வந்தது. இந்நிலையில் 4 மாதங்களுக்குப் பிறகு இஸ்ரேலிய விமானம், காஸாவின் மீது தாக்குதல் நடத்தியது. காஸாவில் இருந்து தெற்கு இஸ்ரேல் மீது ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்திய சில மணி நேரங்களில் இந்த விமான தாக்குதல் நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தத்திற்குப் பிறகு இஸ் ரேல் மீது நடத்தப்படும் மூன்றாவது ரொக்கெட் தாக்குதல் இதுவாகும்.

காஸாவின் ஹமாஸ் பயங்கரவாத உட்கட்டமைப்புத் தளத்தை இலக்காக வைத்தே இந்த தாக்குதல் நடந்ததாகவும் ரொக்கெட் தாக்குதலுக்கு ஹமாஸ் பயங்கரவாத அமைப்பே பொறுப்பேற்க வேண்டும் என்றும் இஸ்ரேல் இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் கர்னல் பீட்டர் லேனர் கூறினார்.

இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என காஸாவின் சுகாதாரத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அதேசமயம், இஸ்ரேல் மீதான ரொக்கெட் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவும் ஹமாஸ் மறுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நடந்த போரில், பலியானவர்களில் 2ஆயிரத்து 140 பாலஸ்தீனியர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள். 73 பேர் இஸ்ரேலியர்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் போர் வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கம்யூனிச கொள்கைகளை அமெரிக்கா மதிக்க வேண்டும்

### கியூப ஜனாதிபதி வலியுறுத்து



அமெரிக்காவும் கியூபாவும் இரு நாடுகளுக்கு இடையேயான தூதரக உறவுகளைப் புதுப்பிக்க இருக்கும் நிலையில் நேற்று முந்தினம் கியூபா ஜனாதிபதி ரபேல் காஸ்ட்ரோ அமெரிககா கியூபாவின் கம்யூனிச கொள்கைகளை மதிக்க வேண்டும் என்றார். இரு நாட்டிலும் இருந்து தத்தமது நாட்டிற்கு புலம் பெயர்ந்தவர்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிக்கலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

18 மாத இரகசிய பேச்சுவார்த்தைக்கு பிறகு இரு நாடுகளும் கைதிகளைப் பரிமாற்றம் செய்ததையும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஹவானாவில் தூதரகம் ஒன்றை திறக்க இருப்பதாக தெரிவித்ததும் இரு நாடுகளுக்கு இடையேயான விரோதப் போக்கு மறைந்து வருவதையே காட்டுகிறது. கியூபா மக்கள் அமெரிக்கா உடனான விரோதப் போக்கு முடிவடைந்ததை பெரும் வெற்றியாக நினைக்கிறார்கள். குறிப்பாக அமெரிக்காவில் உளவு வேலை பார்த்த மூன்று கியூபா புலனாய்வு அதிகாரிகளை விடுதலை செய்தது அந்நாட்டின் மீதான கியூபர்களின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் வரும் ஜனவரி மாதம் கியூபாவிற்கு வருகை தரவிருக்கும் நிலையில், கியூபா ஜனாதிபதி காஸ்ட்ரோ பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஒபாமாவிடம் பேச ஆர்வமாயிருப்பதாகவும் அதேநேரம் கியூபா ஒருபோதும் தன் பொதுவுடைமைத்தத்துவங்களைவிட்டுக் கொடுக்காது என்று கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)




## கறுப்பினத்தவர்களின் கொலை எதிரொலி

## நியூயோர்க்கில் பொலிஸார் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் கடந்த ஜூலை 17ஆம் திகதி 63 வயது எரிக் கார்னர், ஒகஸ்ட் 9ஆம் திகதி 18 வயதான மைக்கேல் பிரௌன் என அமெரிக்கக் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கறுப்பின மக்களின் பட்டியல் நீளமானது. பொலிஸாரின் இத்தகைய செயல்களுக்கு எதிராக அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் எரிக் கார்னரை சுட்டுக் கொன்ற வெள்ளையின காவலருக்கு எந்தத் தண்டனையும் இல்லை என்று ஜூரிகள் தீர்ப்பு வழங்கியதால் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. ஆங்காங்கே சில வன்முறை சம்பவங்களும் நடைபெற்றன.

கடந்த 13 ஆம் திகதி எரிக் கார்னர் கொலை வழக்கில் நீதி கேட்டு அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் இலட்சக்கணக்கானோர் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாது, குழந்தைகளை நடை வண்டிகளில் வைத்து தள்ளியபடி பேரணி நடத்தினர். இது போன்று அமைதியான போராட்டங்கள் ஒருபுறம் நடைபெற்றாலும் மற்றொருபுறம் கறுப்பின மக்கள் மத்தியில் பொலிஸார் மீதான வெறுப்பும், வன்மமும் அதிகரித்த வண்ணம் இருந்தது.

இந்நிலையில் புரூக்ளினின், டாம்ப்கின்ஸ் குடியிருப்பு அருகே நேற்று முன்தினம் மதியம் வென் ஜியன் லியு, ரஃபேல் ருமாஸ் என்ற இரண்டு வெள்ளையின காவலர்கள் தங்களது ரோந்து வாகனத்தில் வைத்து இஸ்மாயில் பிரின்ஸ்லி என்ற கறுப்பின இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொலை செய்த உடன் அருகிலுள்ள சுரங்கப்பாதைக்குச் சென்று பிரின்ஸ்லி தன்னைத் தானே சுட்டுக் கொண்டு சம்பவ இடத்திலேயே பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாதுகாப்பு செலவுக்காக 100 கோடி டொலர் பாகிஸ்தானுக்கு வழங்குகிறது அமெரிக்கா!

இராணுவ செலவுகளுக்காக பாகிஸ்தானுக்கு நூறு கோடி டொலர் வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்த ஆண்டின் பெரிய பாதுகாப்புக் கொள்கை மசோதாவில் கையெழுத்திட்டார்.

பாதுகாப்புக்காக ஒட்டு மொத்தமாக 578 பில்லியன் டொலர் வரை செலவு செய்ய அனுமதி வழங்கும் இந்த பட்ஜெட்டில், பாகிஸ்தானுக்கு கூட்டு ஆதரவு நிதியாக ஒரு பில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது. போர் சூழல் நிறை ந்த ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்திற்கு உதவுவதற்காக ஆகும் இஇராணுவ செலவுகளுக்காக இந்த நிதி வழங்கப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் நிதிக்கு சில நிபந்தனைகள் உண்டு. குறிப்பாக பாகிஸ்தான் ஹக்கானி கும்பல் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அந்நாடு ஆவணங்களை வழங்க வேண்டும்.

தற்போது ஆவணங்கள் எதையும் பாகிஸ்தான் கொடுக்காத போதிலும், வழக்கம் போல பாதுகாப்பு அமைச்சகம் தேச நலன் கருதி இந்த நிதியை வழங்குகிறது. அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து நாடு திரும்பிய பின்னரும் நிதி வழங்குவதைத் தொடர தற்போது இருநாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

தேசிய பாதுகாப்பு அங்கீகார சட்டத்தின் படி, அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர், அமெரிக்கா-பாகிஸ்தான் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து மசோதா தாக்கல் செய்யப்பட்ட முதல் 90 நாட்களுக்குள் முதல் அறிக்கையும் பின் டிசெம்பர் 2017 வரை ஆறு மாதங்களுக்கு ஒருமுறையும் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

## பாகிஸ்தானில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படும்

### நவாஸ் ஷெரீப் திடசங்கற்பம்

(இஸ்லாமாபாத்)

பயங்கரவாதம் வேரோடு அழிக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், அவரது இல்லத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குழுவுடன் நேற்று பேசுகையில்,

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருவதாகவும், அரசு பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலை குறைக்கும் என்று கூறினார்.

பயங்கரவாதத்தை அடியோடு அகற்றுவதிலே பாகிஸ்தான் அரசு கவனம் செலுத்தும், பயங்கர வாதத்தை அழிக்க வேண்டும் என்பதில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே அணியில் திரண்டுள்ளன. இது பயங்கரவாதத்தை வெளியேற்ற உதவியாக இருக்கும் என்று நவாஸ் ஷெரீப் தெரிவித்தார்.

பெஷாவர் பாடசாலையில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு அரபு இளவரசர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கு உதவி செய்வதாக அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் உள்ள இராணுவ பாடசாலையில், தலிபான் தீவிரவாதிகள் 6 பேர் புகுந்து, 132 குழ ந்தைகள் உட்பட 141 பேரை கொன்று குவித்தது உலகமெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பெஷாவர் பாடசாலைத் தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானில் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கையை நவாஸ் ஷெரீப் அரசு முடுக்கி விட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 15ம் ஆண்டு நிறைவு விழா காட்சிகள்


விருந்தினர் வரவேற்பு



இறை வணக்கம்


ஆசியுரை



நிகழ்வில் கலந்து கொண்ட பெருந்தகைகள்









மூத்த ஊடகவியலாளர் திரு. க. லோகநாதன் தம்பதியினர் கௌரவிக்கப்பட்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம்மாறிய இந்துக்களை மீட்டெடுத்தாக வேண்டும்

## ஆர்.எஸ்.எஸ். தலைவர் பேச்சு

பிற மதத்தினர் கூறிய ஆசை வார்த்தைகளால் கவரப்பட்டு மதம் மாற்றப்பட்ட இந்துக்களை மீட்டெடுக்க வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் தெரிவிதது்ள்ளார்.

மேலும், அவ்வாறாக மதம் மாறிய இந்துக்களை மீண்டும் தாய் மதத்தை மீட்டெடுப்பதில் எந்த தவறும் இல்லை என்றார். இருப்பினும் சங் பரிவார் அமைப்புகள் பயன்படுத்திய கர் வாப்ஸி என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை.

கொல்கத்தாவில் விஷ்வ ஹிந்து பரிசத் ஏற்பாடு செய்திருந்த பேரணியில் பேசிய அவர், "மதமாற்றம் தவறு என பேசுபவர்கள் ஏன் மத மாற்ற தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்த ஒத்துழைப்பதில்லை" என கேள்வி எழுப்பினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர் பிரவீண் டொகாடியா, மேற்குவங்கத்துக்குள் வங்கதேசத்திலிருந்து மக்கள் ஊடுருவுவதை தடுக்க வேண்டும். ஏனென்றால் அவ்வாறாக ஊடுருபவர்கள் நம் நாட்டை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடனேயே நுழைகின்றனர். இதை தடுக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமஎன தெரிவித்தார்.

மேலும், ஒரே ஒரு பசுகூட வதைக்கபட அனுமதிப்பதில்லை என அனைவரும் உறுதி ஏற்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# குஜராத்தில் 100 கிறிஸ்தவர்கள் இந்துக்களாக திடீரென மாற்றம்

## பகவத் கீதை பரிசாக வழங்கப்பட்டது

தெற்கு குஜராத்தில் விஸ்வ இந்து பரிஷத் அமைப்பு சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் 100 கிறிஸ்தவ பழங்குடியினர் இந்துக்களாக மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்துக்களாக மதமாற்றம் செய்யப்பட்டுள்ள பழங்குடியினர் முன்னதாக இந்துக்களாக இருந்தவர்கள். அவர்கள் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டனர், தற்போது அவர்கள் தங்களது சொந்த மதத்திற்கு திரும்பியுள்ளனர் என்று விஸ்வ இந்து பரிஷத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மக்கள் தாங்களாகவே மதமாற்றம் செய்து கொண்டுள்ளனர். யாரும் வற்புறுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்துக்களாக மக்கள் மதம் மாறுவதற்கு வசீகரிக்கும் விதமாக பொருட்கள் வழங்கப்படுகிறது என்ற தகவலை விஸ்வ இந்து பரிஷத் மறுத்துள்ளது. இந்துவாக இருந்தவர்கள், கிறிஸ்தவர்களாக மத மாற றம் செய்யப்பட்ட போது, அவர்களை வசீகரிக்கும் விதமாக உணவோ அல்லது கல்வியோ வழங்கப்படவில்லை. அனைத்து கிறிஸ்தவர்களும், இந்துக்களாக மாறும் வரை யில இநத பணி தொடர்ந்து நடை பெறும்" என்று விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் தலைவர் அஜித் சோலாங்கி தெரிவித்துள்ளார்.

"மதமாற்றம் கட்டாயமாக செய்யப்படுகிறது என்பது தொடர்பாக நாங்கள் எந்த ஒரு தகவலையும் பெறவில்லை. மக்கள் எந்தஒரு மதத்தையும் பின்பற்ற சுதந்திரம் உள்ளது," என்று குஜராத் அரசின் செய்தித் தொடர்பாளர் நிதின் படேல் தெரிவித்துள்ளார். கிறிஸ்தவர்கள், இந்துக்களாக மதமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னதாக புனித சடங்குகள் நடைபெற்றுள்ளது. அப்போது அவர்களுக்கு பகவத் கீதை பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 3ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மதமாற்றத்தை தடுக்க புதிய சட்டம் அவசியம்

## அமித்ஷா தெரிவிப்பு

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தலைவரான அமித்ஷா, கட்டாய மதமாற்றத்தை தடைசெய்ய புதிய சட்டம் வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். கட்டாய மதமாற்றம் இந்தியாவில் மிகவும் சர்ச்சைக்குரிய விவகாரமாக இருந்துவருகிறது.



கட்டாய மதமாற்றத்துக்கு எதிரான நாட்டின் ஒரே கட்சி பாஜக தான் எனக் கூறிய அமித்ஷா, புதிய சட்டம் இயற்றப்படுவதற்கு மற்ற கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டுமென வலியுறுத்தினார். இந்த விவகாரம் நாடாளுமன்ற கூட்டத் தொடரை முடங்கச் செய்திருந்தது.

அண்மைய காலங்களில் வேறு மதத்தவர்கள் இந்து மதத்துக்கு கட்டாய மத மாற்றம் செய்யப்படுவதை பா.ஜ.க. மறை முகமாக ஆதரித்தது என எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

டிசெம்பர் 25ஆம் திகதி கிறிஸ்துமஸ் தினத்தன்று உத்தர பிரதேசத்தின அலிகரில் பெருமளவானவர்கள் இந்து மதத்துக்கு மாறுகின்ற நிகழ்ச்சி ஒன்றை நடத்தப்படுவதாக இருந்து பின்னர் அது ரத்து செய்யப்பட்டிருந்தது.

அதற்கு முன்பாக ஆக்ராவில் 57 முஸ்லிம் குடும்பங்கள் இந்து மதத்துககு மாற்றப்பட்டதாக கூறிய சம்பவமும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. இலவச உணவுகல்விபோன்றவை தருவதாக ஆசை காட்டி அல்லது வன்முறை வரும் என்று அச்சுறுத்தப்பட்டோ மதமாற்றத்துகத அனுமதி வாங்கப்படுகிறது என்று குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் ஓ.பி மீண்டும் கடிதம்

**கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன்பாக தமிழக மீனவர்கள் 66 பேரை இலங்கை அரசு விடுதலை செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 16ஆம் திகதி, தங்களுக்கு எழுதிய கடிதத்தில், தமிழக சிறையில் இருக்கும் 30 இலங்கை மீனவர்களை கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக மனிதநேய அடிப்படையில் விடுதலை செய்ய தமிழக அரசு தயாராக இருக்கிறது. அவர்களின் 19 படகுகளையும் 22ஆம் திகதி விடுவிக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது' என தெரிவித்திருந்தேன்.

இதன்மூலம் இலங்கை மீனவர்கள் தங்கள் தாய் நாட்டுக்கு திரும்பி, 'குடும்பத்தினருடன் கிறிஸ துமஸ் பண்டிகையை கொண்டாட முடியும். இதற்கு மாற்றாக கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட வசதியாக இலங்கை சிறையில் வாடும் 66 தமிழக மீனவர்களையும் அவர்களது 81 படகுகளையும் விடுவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இதற்கிடையே, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் இருந்து ஒரு கடிதம் எங்களுக்கு கிடைத்தது. இலங்கை சிறையில் உள்ள 66 மீனவர்களை மட்டும் விடுவிக்க அந்நாட்டு அரசு ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களின் 81 படகுகளை விடுவிப்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கடந்த ஜூன் முதல் இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்க முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தார். மீனவர்களின் படகுகள் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்படாமல் இருக்க, உடனடியாக அவற்றை விடுவிக்க வேண்டு கோள்விடுத்தார். தற்போது இலங்கை அரசு அந்தப் படகுகளை விடுவிக்க விரும்பாதது ஏமாற்றம் அளிக்கிறது.

ஆனாலும், கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தமிழக அரசு பெருந்தன்மையுடன் 30 இலங்கை மீனவர்களை 22ஆம் திகதி விடுதலை செய்கிறது.

அதேநேரம், இலங்கை சிறையில் உள்ள 66 தமிழக மீனவர்களையும் விடுதலை செய்வதை மததிய அரசு உறுதிப்படுத்த வேணடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னங்கண்டி பாலத்தினூடான போக்குவரத்து ஆபத்தானது

## பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(மருதநகர்)

கிளிநொச்சி வட்டக்கச்சியில் அமைக்கப்பட்டுள்ள பன்னங்கண்டி பாலத்தின் ஊடான போக்குவரத்து ஆபத்து நிறைந்து காணப்படுவதாக பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பாதையானது மிக வேகமாகவும் நேர்த்தியாகவும் புனரமைக்கப்பட்டுவந்தபோதிலும்




கடந்த ஒரு மாத காலமாக இப்பாதை மற்றும் பாலப்புனரமைப்புப் பணிகள் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள குறித்த பாலம் வெடித்து உடைப்புக்கள் காணப்படுவதால் இதனூடான பொதுமக்கள், வாகனப் போக்குவரத்து என்பன ஆபத்து நிறைந்தது என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது தெரிந்ததே.

முன்னதாக வட்டக்கச்சி வீதி அபிவிருத்தி தொடர்பான பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களை தெரிந்து கொள்வதற்காக கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்,

பன்னங்கண்டி பாலம் பழைமை வாய்ந்தது என்பதால் அதனை தகர்த்து புதிய பாலம் அமைக்கப்படவேண்டியதன் அவசிய த்தை பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

எனினும் நிதிப்பற்றாக்குறையை காரணம் காட்டி இப்பாதையை புனரமைப்பு செய்வதிலேயே கரிசனை காட்டி வந்தனர்.

இதன் தொடர்ச்சியாக இப்பாலத்திற்கு கீழாக அதன் அருகில் சமாந்தரமாக ஆற்றுப்படுகையூடாக ஒரு தற்காலிகமாக பாதையொன்றை ஒப்பந்தக்காரர் திறந்து விட்டதன் பின்னர் கனரக வாகனங்கள் சகிதம் பாலத்தை புனரமைக்க அகழ்வதற்கு தலைப்பட்ட போது உடைப்பிற்குள்ளாகி சிதிலம் அடைந்து பாரிய சேதம் ஏற்பட்டு அபாய நிலையை எட்டியது. இதன்பின்னர் பாலம் மூடப்பட்டது.

எனினும் கிளிநொச்சியில் பெய்து வந்த கனமழையினை அடுத்து தற்காலிகமாக அருகில் அமைக்கப்பட்ட பாதையையும் மேவி வெள்ளம் பெருக் கெடுத்துள்ள நிலையில் அப்பாதைக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட இப்போது அபாயம் நிறைந்த பாலத்தின் ஊடாக வாகனங்களும் பொதுமக்களும் பயணத்தை தொடங்கியுள்ளன.

இந்நிலையில் இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டால் பன்னங்கண்டி பாலத்தினூடாக போக்குவரத்து மேலும் பாதுகாப்பற்றதாகமாறும் நிலை ஏற்படுவதோடு முற்றாகவும் துண்டிக்கப்படவும் வாய்ப்புள்ளதாக பொதுமக்களாலும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளாலும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் பாதுகாப்பாக போக்குவரத்தினை மேற்கொள்ள வழி ஏற்படுத்த வேண்டுமெனவும் பொதுமக்களாலும் அமைப்புக்களின் பிரதிநிதிகளாலும் கோரிக்கை விடப்படுகின்றது. (2-285)



வடமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய மாங்குளத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனினால் நேற்றுமுன்தினம் மாங்குளத்தில் அமைந்துள்ள அவரது இணைப்பு அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

## கடையின் முன்கதவு உடைக்கப்பட்டு ஒரு இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருடர்களால் சூறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றை உடைத்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடர்கள் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் உருத்திரபுரம் சிவன்கோவில் வீதியில் உள்ள மாதா கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள பலசரக்குகடை ஒன்றில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடை உரிமையாளர் நேற்று முன்தினமிரவு கடையை பூட்டிவிட்டு மறுநாள் காலை திறப்பதற்காக வந்த நிலையில் முன்கதவு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டார்.

அவர் கடையினுள் நுழைந்து பார்த்த வேளை அங்கு தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள், உண்டியல் பணம், பால்மா வகை உட்பட பெறுமதிவாய்ந்த பொருட்கள் திருடப்பட்டு இருப்பதையும் கடையினுள் மலம் கழிக்கப்பட்டிருப்பதையும் கண்டறிந்தார்.

இதனையடுத்து உருத்திரபுரத்திலுள்ள நடமாடும்பொலிஸ் பிரிவிற்கு தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் திருட்டு இடம்பெற்றது தொடர்பில் பார்வையிட்டனர்.

அதன்பின்னர் உரிமையாளரிடம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்து குற்றப் புலனாய்வு பொலிஸார் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினர். குறித்த திருட்டு குறித்து கடை உரிமையாளரான பாலகிருஷ்ணன் சிவகுமார் என்பவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைபதிவுசெய்தார். (2-254)

## விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்ய சமுகமளிக்கவும்

### ஆசிரியர்களுக்கு அதிபர் அழைப்பு

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுக்கான விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் எம். எஸ். பத்மநாதன் அறிவித்துள்ளார்.

பதவி உயர்வுக்கான விண்ணப்பங்களை உடனடியாக பூர்த்தி செய்து வழங்க வேண்டியுள்ளமையால் பதவி உயர்வுக்கான ஆவணங்களுடன் அன்றைய தினம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பாடசாலைக்கு சமுகமளித்து விண்ணப்பங்களை பூர்த்தி செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (2-250)

## பாலங்களின் புனரமைப்பு பணிகளை துரிதகதியில் பூர்த்தி செய்யுங்கள்

### சந்திரகுமார் எம்.பி அதிகாரிகளுக்கு பணிப்பு

பாலங்களின் புனரமைப்பு பணிகள் நிறைவடையாததால் மழைக்காலங்களில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு தீர்வு காணும் வகையில் புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பணிப்பு விடுத்துள்ளார்.

வேலை நடைபெறும் பாலங்களை நேற்றுமுன்தினம் பார்வையிட்டதோடு மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அவதானத்தைத் தொடர்ந்தே அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்பு பணிகளுக்குட்படுத்தப்பட்டுள்ள சில பாலங்களின் பணிகள் இதுவரை நிறைவடையவில்லை

இதனால் தற்போது பெய்து வரும் அடை மழையினால் மக்கள் போக்குவரத்தின் போது சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் குறித்த பால வேலைகள் நடைபெறும் இடங்களுக்கு நேரில் சென்ற அவர பாலங்களை அமைக்கும் பணியில் ஏற்பட்டுள்ள கால தாமதம் குறித்து ஆராய்ந்ததோடு உடனடி மாற்று போக்குவரத்து பாதைகளை அமைப்பது குறித்தும் ஆராய்ந்தார்.

அத்தோடு இரணை மடுக்குளம் திறக்கப்படும் தருவாயில் ஏற்படப்போகும் பாதிப்பு மக்களுக்கு பயணச்சிரமங்களை ஏற்படுத்தும் என்ற எதிர்வு கூறலுக்கேற்ப குறித்த பாலங்கள் அமைக்கப்பட்டுவரும் பகுதிகளினூடான போக்குவரத்திற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அவ் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு பணிப்பு விடுத்தார்.

இவ்விஜயத்தின்போது பால வேலைகள் நடைபெற்றுவரும் வட்டக்கச்சி, கிளிநொச்சி வீதியில் உள்ள பன்னாங்கண்டிபாலம் மற்றும் ஏ32 வதியில் உள்ள புளியம்பொக்கணைப்பாலம் தருமபுரம் நெத்தலியாற்றுப் பாலம் போன்றவற்றை அவர் பார்வையிட்டார் . (2)

## வவுனியாவில் பெய்துவரும் கனமழையினை அடுத்து குளங்கள் உடைப்பெடுப்பு; 234 குடும்பங்கள் பாதிப்பு

### வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக 234 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரு குளங்களும் உடைப்பெடுத்துள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன. அந்த வகையில் பெரியமடு கிராமத்தில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 171 பேரும், நொச்சிமோட்டையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேரும், பன்றிக்கெய்த குளம் கிராமத்தில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 169 பேரும், மாணிக்க இலுப்பைக்குளத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும், பேயாடிகூழாங்குளத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேரும், சாந்த சோலையில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேரும், பனிக்கநீராவியில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேருமாக மொத்தம் 234 குடும்பங்களைச் சேர்ந்த 899 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

பாவற்குளம் படிவம் இரண்டில் மழை வெள்ளம் காரணமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் இடம்பெயர்நதுள்ள நிலையில் பாடசாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் மழை காரணமாக 14 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இதேவேளை சின்னரசன் குளம், புதியசின்னக்குளம் என்பன உடைப்பெடுத்துள்ளன. அதனை தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. செட்டிகுளம் பகுதிக்கான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளதுடன் பாவற்குளம் நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது. (2)

## கத்தி முனையில் அச்சுறுத்தி 22 பவுண் நகைகள் கொள்ளை

(குருமன்காடு)

இரு வீடுகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு 22 பவுண் நகைகளை கொள்ளையிட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்துணிகர கொள்ளைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் வவுனியா-கோயில்குளம் 11 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள இரு வீடுகளில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டின் பின் கதவினை உடைத்து கத்திகளுடன் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை பயமுறுத்தி தாக்கிவிட்டு 22 பவுண் நகைகளைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது வீடுகளில் இருந்த மூவர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

இதனையடுத்து வடுகளின் உரிமையாளர்களினால் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் கைரேகைப் பதிவினை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளையும் நடத்தினர்.

கொள்ளையிடப்பட்ட நகைகளின் பெறுமதி 8 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா என வீட்டு உரிமையாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுக்கட்டையும் மோதகமும் தோற்றத்தில் வேறு; உள்ளீடு ஒன்றுதான்
– கோபிகிருஷ்ணா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழருக்கு ஏமாற்றம் கிடையாது

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்துள்ள இவ்வேளையில் இருபெரும் முக்கிய வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்கள் தடல்புடலாக அரங்கேறி வருகிறது.

இதில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் நூறு நாளில் புதிய தேசம் என்ற தொனிப்பொருளினை மையப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் தொடர்பான விடயங்கள் எதுவும் இடம்பெறாமை பலத்த ஏமாற்றத்தைத் தருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், தமிழர்களின் விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் என்று நாங்கள் யாரேனும் எதிர் பார்த்திருந்தால் அது ஏமாற்றமாக இருந்திருக்கும்.

ஆனால் எங்களைப் பொறுத்தவரை மைத்திரியும் மகிந்தவும் உடலால் வேறுபட்டவர்களே அன்றி பேரினவாதத்தால் – பௌத்தமதவாதத்தால் ஒன்றுபட்டவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் பிரச்சினையை எந்தத் தரப்பும் முன்னிலைப்படுத்தி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அவ்வாறான எதிர்பார்ப்புகள் முன்பும் நடந்த வரலாறும் இல்லை.

எனவே தமிழர்களைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை தேர்தல் விஞ்ஞாபனங்கள் தீர்மானிக்க மாட்டாது.

மாறாக நாட்டின் ஜனநாயகப் பண்பை ஓரளவேனும் காப்பாற்றக்கூடியவர் யார் என்பதைப் பொறுத்தே தமிழர்களின் வாக்களிப்பு அமையும்; அமைய வேண்டும்.

எனவே மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்து விட்டது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை விடுவதானது உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

அதாவது மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்து விட்டதெனக் கூறுவதனூடாக, மைத்திரியை தமிழர்கள் ஆதரிக்கலாகாது என்ற செய்தி மறைமுகமாகக் கூறப்படுகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தத்தம் அறிவியலுக்கு ஏற்ற தீர்மானத்தை எடுப்பர். இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவதே பொருத்தமானது.

எனினும் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருநிலைத் தன்மை இருப்பதைக் காணமுடிகிறது. அதாவது கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு தரப்பினர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். இன்னொரு தரப்பினர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டுமென நிற்கின்றனர் என்பது புலனாகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய இரட்டைத் தன்மை நிலைமையை, கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வெளியிடும் அறிக்கைகளும் கருத்துக்களும் சான்றுப்படுத்தி நிற்கின்றன. சுகாதார அமைச்சராக இருந்த போது மைத்திரிபால சிறிசேன நமக்குச் செய்த உதவியை மறக்கலாகாது என்கிறார் வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர்.

அதேநேரம் மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளதென்கிறார் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர். ஆக, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒரு நிதானமான போக்கு காணப்படவில்லை என்பது உறுதியாகிறது.

கட்சி என்பதைக் கடந்து தனி மனித விருப்பு வெறுப்புக்கள் மேலோங்கும் போது ஏகமனதான முடிவிற்கு வருவது கடினமானது என்ற உண்மையின் அடிப்படையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் தாமாகவே சிந்தித்து வாக்களிப்பர் என்று கூறுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையாய கடமையாக இருக்கும்.

# ஜனாதிபதி மகிந்தவுக்கே தீவக மக்கள் வாக்களிக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொருளாதாரத்தில் பின்தங்கியிருந்த தீவகப் பிரதேசத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தீவக மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார். வேலணை ஐயனார் மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கிய தீவகம் அமைச்சரின் சிறந்த வழிகாட்டல்களுக்கு அமைவாக பாரிய முன்னேற்றமும் அபிவிருத்தியும் கண்ட வருகின்றது.

அந்த வகையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தீவகம் அபிவிருத்தியில் பின்தங்கியிருந்தது.

இந்த நிலையில் தீவகத்தை அபிவிருத்தி செய்வதுடன் மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் அமைச்சர் திட்டங்களை வகுத்து அவற்றை நல்ல முறையில் செயற்படுத்தி வருகின்றார்.

அந்த வகையில் அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக தீவகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தமது முழுமையான ஆதரவினை வழங்கி அதற்கான நிதி உதவிகளையும் வழங்கி வருகின்றார்.

எனவே, இவ்வாறான அபிவிருத்திகளை தொடர்வதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தீவக மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பொய்யான பரப்புரைகளை நம்பி மக்கள் ஒரு போதும் ஏமாந்து விடக் கூடாது என்றும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த உரையாற்றும் போது, கடந்த ஐந்து வருடங்களுக்கு பின்னர் வேலணை உள்ளிட்ட தீவகம் மிக அற்புதமான முறையில் அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மலேசியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட இலங்கையர் உட்பட 2986 பேர் கைது

(கோலம்பூர்)

மலேஷியாவின் ஜொகூர் பொலிஸாரால், கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விபசாரம் தொடர்பான 10 ஆயிரத்து 300 சுற்றிவளைப்புக்களில் ஆறு இலங்கையர் உள்ளிட்ட 2 ஆயிரத்து 986 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களில் உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பெண்களும் அடங்குவதாக ஜொகூர் பொலிஸ் தலைமை அதிகாரி முகமது மொக்தார் முகம்மட் ஷரீஃப் தெரிவித்துள்ளார்.

இதன்படி கைதானவர்களில் 102 உள்நாட்டவர்கள், 627 சீனர்கள், வியட்நாம் 1341, தாய்லாந்து- 555, இந்தோனேஷியா- 229, காம்போடியா- 13, பிலிப்பைன்ஸ்-62, மியன்மார்- 16, சிங்கப்பூர்- 1, லாவோஸ்- 4, இலங்கை- 6, இந் தியா- 29 மற்றும் வெனிசுவெல- 1 ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்குவதாக தெரியவந்துள்ளது. (இ-5)

## ஐ.தே.க மீது தாக்குதல்

(அம்பாந்தோட்டை)

சிவில் சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஐ.தே.க. உள்ளூராட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்த சமயம் இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அம்பாந்தோட்டை பஸ் தரிப்பிடப் பகுதியில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் அம்பாந்தோட்டை மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் அயூப் கான் உட்பட பலர் காயடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் அம்பாந்தோட்டை, அம்பலாந்தொட்ட மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டிப் பிரபலமான, அம்பாந்தோட்டை முதல்வரே இந்த தாக்குதலை மேற்கொண்டார் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் குற்றம்சாட்டின. குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மனித உரிமை பணியாளர்கள் பிரிட்டோ பெர்ணாண்டோ, ஜயதிலக பண்டார, பிலிப் திசநாயக்க உள்ளிட்ட பலர் தாக்கப்பட்டனர் என்றும் தெரியவருகிறது. (எ-11)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வட மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனால் கோப்பாய் தொகுதிக்கான மக்கள் தொடர்பாடல் செயலகம் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலி [illegible] திறந்து வைக்கப் படவுள்ளது. (இ-13)

## தேர்தலுக்கு முன்னர் அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த சகலருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவற்றைப் பெற்றுக் கொடுக்க தேவையான நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டுள்ளது என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத் குமார தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைக்காக இதுவரை 75 ஆயிரம் விண்ணப்பங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றன, விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாத்திரமே அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அடையாள அட்டைகளை வழங்கும் வகையில் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் இதுவரை 137 நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களான நுவரெலியா, பதுளை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் விசேடமாக நடமாடும் சேவை நடத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஐம்புலனால் அறிய முடியாதது அரூபம்



சத்து சித்து ஆனந்தம் அனைத்து மாகி
சர்வ வியாபகமாயும் நிறைந்து உள்ள
அத்துவித ஆதிபராசக்தி தன்னை
ஐயுணர்வில் எதைக் கொண்டும் அறியப் போகா
தத்துவங்கள் அனைத்திற்கும் மூலமான
தலையாய நம் சக்தி அரூப மன்றோ?
வித்து நிலையை அறிந்து அறிவை ஒன்ற
விவேகயூகம் உயர்ந்து அதே தானாகும்.

சத்து என்பது பூரணமான பேராதார நிலை (Potential Energy) அதன் எழுச்சி நிலையான அணு முதல் அண்டங்கள் பிண்டங்கள் அனைத்தும் தோற்றம், இயக்கம், மாற்றம் என்ற இயக்கத்தில் உள்ளதால் சித்து எனப்படும். பரிணாம சிறப்பின் உச்சமாகிய உணரும், அறியும் நிலையாகிய அறிவு ஆனந்தம் எனப்படும்.

இம்மூன்று நிலைகளை அடைந்தும் ஆதி நிலையாய் குறைவுபடாமல் பேதப்படாமல் பூரணமாக நிறைந்து எல்லையற்றிருக்கும் அரூப சக்தியைக் கண், காது, மூக்கு, நாக்கு, ஸ்பரிசம் இவற்றில் எதைக் கொண்டும் அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில் நாமாக நமது மூலமாக இருக்கும் அந்தச் சக்தி அரூபமாக இருப்பதால், உடலியக்கத்திற்கும், அறிவியக்கத்திற்கும் மூலமான விந்துவின் நிலையை அறிந்து, அவ்விடத்தே அறிவை நிறுத்திப் பழகி வரும் தவத்தால் ஏற்படும் ஓர்மை நிலையில் அறிவே அதுவாகி - ஆதியாகி விடும். இதை யூக உணர்வினால் மட்டும் அறிந்துகொள்ள முடியாது.

ஆகாயத்தில் நாம் பார்க்கும் போது கண்களுக்குப் புலனாவது வெட்டவெளி அல்ல. அது அணுவெளி. அணுக்கள் மீது சூரியன் முதலிய கிரகங்களின் ஒளிக்கதிர்படுவதால் ஏற்படும் பிரதிபலிப்பு ஒளி நமக்குத் தோற்றமாக வெளிச்சமாகப் புலனாகிறது. சுத்த வெளி இருள், அகண்டம், எனும் நிலையில் அரூபமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்துப் போட்டியில் கேரளாவை வீழ்த்தி சம்பியனானது கொல்கத்தா





இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் கேரளாவை வீழ்த்தி கொல்கத்தா அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்திய பிரபலங்கள் பலரின் காற்ப்ந்து அணிகள் பங்கேற்ற ஐ.எஸ்.எல். காற்பந்து இறுதிப் போட்டி மும்பையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் பலம் வாய்ந்த கங்குலியின் அணியின் கொல்கத்தா அணியும், சச்சினின் கேரளா அணியும் மோதின. ஆரம்பம் முதலே இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முயற்சி செய்தனர்.

இதன் பயனாக இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆனால், கோல்கீப்பர்கள் அருமையாக செயற்பட்டு அனைத்து வாய்ப்புகளையும் வீணடித்தனர். ஆகவே, 90 நிமிடம் வரை இரு அணி வீரர்களும் கோல் அடிக்கவில்லை.


இதனால் இரு அணிகளுக்கும் தலா 3 நிமிடங்கள் கூடுதல் நேரமாக ஒதுக்கப்பட்டது. இதில் எந்த அணி கோல் அடித்தாலும் அத்துடன் போட்டி நிறைபெறும் என அறிவிக்கப்பட்டது.

அந்த 6 நிமிடத்தின் கடைசி நேரத்தில் கார்னரில் இருந்து அடித்த பந்தை கொல்கத்தா வீரர் மொகமது ரபீக் அருமையாக தனது தலையால் முட்டி கோலாக்கினார்.

இதன்மூலம் கங்குலியின் கொலகத்தா அணி ஐ.எஸ்.எல். காற்பந்தின் முதல் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. (க)



# பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்து யாழ்ப்பாணத்தில் அமைச்சர் டக்ளஸால் ஆரம்பம்





அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையிலான மேசைபந்தாட்ட சுற்றுப் போட்டியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதி மேற்படி போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்பதாக யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக மேசைப் பந்தாட்டத்துக்கான மேசைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களிடம் வழங்கி வைத்தார்.

அத்துடன், பயிற்சி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களையும் அமைச்சரே வழங்கி வைத்தார்.

யாழ்.மத்தியகல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேசைப்பந்தாட்ட விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது ஆலோசனைக்கு அமைவாக முதற்கட்

SPORTS விளையாட்டுச் செய்திகள்

டமாக 13 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.


தெரிவு செய்யப்பட்டுள்ள குறித்த பாடசாலைகளின் மாணவர்களுக்கு மேசை பந்தாட்ட துறையில் அககறையுள்ள, உணர்வுள்ள, விருபபமுள்ளவர்களுக்கு அமைச்சர் லசந்த அழகியவன்னவின் முயற்சியால் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த வகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கததின் செயலாளர் சந்தன பெரேராவிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியிலான மேசைப் பந்தாட்ட போட்டிகள் இன்றும், நாளையும், மூன்று நாட்கள் நடைபெறுகின்றன.

இப்போட்டிகளை அகில இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கமும் யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை மேசைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் சந்தன பெரேரா, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட [illegible] கலந்தனர். (க-23)

# அவுஸ்திரேலியா வெற்றி



அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையில் பிரிஸ்பேர்ண் மைதானத்தில் நடைபெற்றுவந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

மூன்றாவது நாள் ஆட்ட முடிவின்போது ஒரு விக்கெட்டை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி, 224 ஓட்டங்களைப் பெற்றவேளையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. எனவே, அவுஸ்திரேலிய அணிக்கு 128 என்ற இலகுவான வெற்றி இலக்கு அமைந்தது. ஆயினும் ஆடுகளத்தின் தன்மையை நன்கு பயன்படுத்திக்கொண்ட இஷான் சர்மா, சிறப்பாகப் பந்துவீசி அவுஸ்திரேலிய அணியை சிறிது தடுமாற்றத்துக்குள்ளாக்கினார்.

24ஆவது ஓவர் பந்துவீசப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி வெற்றி இலக்கை அடைந்தது. கிறிஸ் ரோஜர்ஸ் 55 ஓட்டங்களையும் ஸ்டீபன் சுமித் 28 ஓட்டங்களையும் பெற்றனர். இஷான் சர்மா 3 விக்கெட்டுகளையும் உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீபன் சுமித் தெரிவானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சுதந்திரத்தை ஏற்படுத்தியவர் மகிந்த

## அமைச்சர் சுசில் புகழாரம்

(கொழும்பு)

யுத்தத்திலிருந்து நாட்டை மீட்டெடுத்து வடபகுதி மக்களை சுதந்திரமாக வாழவை த்த பெருமை மகிந்த அரசையே சாரும். இதன்காரணமாக வடபகுதியில் எமக்கு தொடர்ச்சியான ஆதரவு இருக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார் சுற்றாடல் மற்றும் புதுப்பி க்கதக்க சக்திவள அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்டத்திற்கான தேர்தல் அலு வலகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா, தேக்கவத்தை பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முன்பு தேர்தல் காலங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்ய செல்வதென்றால் எவ்வளவு பாதுகாப்புக்களுக்கு மத்தியில் செல்லவேண் டும். ஆனால் இப்போது அப்படியில்லை. சுத ந்திரமாகச் சென்று வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யமுடிகிறது.

இதற்கு காரணம் யுத்தம் முடிவுக்கு வந்த மையே. ஜனாதிபதி யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சுதந்திரத்தை நிலைநாட்டியு ள்ளார். அதை குழப்புவதற்கும் மீண்டும் யுத் தத்தை ஏற்படுத்தவும் சிலர் முயற்சிக்கின்ற னர்.

இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. வடபகுதி மக்கள் எம்முடன்தான் இருக்கின்றனர். இதைவிட தமிழ் அரசியல் கட்சிகள் பல எமக்கு ஆதரவு வழங்கியுள் ளன. குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப் பைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசுடன் இணைந்துகொண்டுள்ளனர். புளொட், சிறிரெலோ போன்ற கட்சிகளும் எமக்கே ஆதரவு வழங்கியுள்ளன என்றார். (எ-11)

# இந்தியாவை ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பில் இந்தியா கரிசனை கொண்டுள்ள நிலையில், இலங்கையின் எதிர்க்கட்சி தரப் பும் சீனாவுக்கு எதிரான கொள்கையை கடை பிடிப்பதாக த ஹிந்து கருத்து வெளியிட்டுள் ளது.

அண்மையில் வர்த்தகத் துறையினரை சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால ஜனா திபதியாக பதவியேற்றதும் காலிமுகத்திடல் கடலை நிரப்பி சீன நிறுவனத்தினால் முன் னெடுக்கப்படும் கொழும்பு போட் சிட்டி திட்டம் ரத்து செய்யப்படும் என்று அறிவித்திருந்தார்.

இந்த திட்டம் 1.34 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் 580 ஏக்கர் பரப்பில் மேற்கொள் ளப்படுகிறது.

இந்தநிலையில் குறித்த திட்டத்தினால் இலங்கையின் கரையோர கடல் வளம் பாரிய பாதிப்புக்கு உள்ளாகும் என்ற அச்சம் காரணமாகவே அதனை ரத்து செய்யப் போவதாக ரணில் குறிப்பிட்டார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் சம் பிக்க ரணவக்கவும் சீனாவிடம் இலங்கை பெறும் கடன்களால் பாரிய கடன்சுமை நாட் டின் மீது சுமத்தப்படுவதாக குற்றம் சுமத்தியு ள்ளார்.

பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், இந்தியாவு டனும் சீனாவுடனும் சமநிலை உறவை பேணப் போவதாக அறிவித்துள்ளார்.

எனவே பொதுவில் பார்க்கும்போது ஜனா திபதி தேர்தலில் பொதுவேட்பாளருக்கு ஆதர வளிக்கும் கட்சிகள் இந்தியாவுக்கு சார்பான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக த ஹிந்து தெரிவித்துள்ளது. (எ-11)

# தபால்மூல வாக்களிப்பை கண்காணிக்கக் குழு

ஜனாதிபதி தேர்தலில் தபால்மூல வாக்க ளிப்பினை மேற்கொள்ளவுள்ள படையின ரைக் கண்காணிப்பதற்காக தெற்கிலிருந்து 250 சிங்கள ஊழியர்களை வடமாகாணத் திற்கு தேர்தல் திணைக்களம் அனுப்பியிரு ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாளை 23-ம் திகதி ஜனாதிபதித் தேர்த லுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம் பெற வுள்ளது.

இதன்போது வடமாகாணத்தின் 5 மாவட் டங்களிலும் உள்ள படையினர் தபால்மூல வாக்களிப்பினை செய்யவுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வாக்களிப்பின் போதுதான் கண்காணிப்பு நடவடிக்கைகளு க்காகவே மேற்படி 250 சிங்கள ஊழியர்க ளையும் முன்னாள் வடமாகாண பிரதி தேர் தல் ஆணையாளர் ஒருவருவரை மேற்பார் வையின் கீழ் தேர்தல் திணைக்களம் அனுப் பியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மேற்படி ஊழியர்கள் குழு படையினரின் முகாம்களுக்குள் சென்று வாக்களிப்பு நடவடிக்கைகளை நேரடியாக அவதானிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இம்முறை படைமுகாம்க ளுக்குள் முறைகேடுகள் நடக்க சாத்தியமி ல்லை எனவும் தெரியவருகின்றது. (எ-11)

# வாய்ப்பேச்சை இந்திய அணி தவிர்க்க வேண்டும் - கவாஸ்கர்



பிரிஸ்பேன் டெஸ்ட் 4ஆம் நாள் ஆட்டத்தில் ஏற்பட்ட தோல்விக்கு ஷிகர் தவன் காயத்தை காரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்று சுனில் கவாஸ்கர் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, அவுஸ்திரே லிய வீரர்களுடன் இந்திய வீரர்கள் பதிலுக்கு பதில் வாய்ப்பேச்சில் ஈடுபடக்கூடாது என்றே நான் கருதுகிறேன்.

இந்தியாவில் கிளப் மட்ட கிரிக்கெட்டில் கூட ஸ்லெட்ஜிங் போன்றவை இல்லை, நமக்கு அது பழக்கம் கிடையாது. ஆனால் அவுஸ் திரேலியர்கள் கிரிக்கெட் ஆட்டத்தை அப்படி ஆடியே பழக்கப்பட்டவர்கள். எனவே அவர்க ளிடத்தில் இது செல்லுபடியாகாது.

ஆனால் இந்தியர்களான நமக்கு ஒவ்வொரு வார்த்தையும் மனதில் ஆழமாக பதிந்து விடும். நாம் அதை வெளியே தூரத் நினைத்தாலும் அது நம் மனதில் தங்கும்.

அப்படி மனதில் தங்கிவிடும் போது அது ஆக்க பூர்வமான விளைவுகளை ஏற்படுத்தாது. அவுஸ்திரேலிய வசைக்கு பதிலடி கொடுப்பது என்பது புத்திசாலித்தனமான நடைமுறை அல்ல என்றார் அவர். (க)

## ஐ.நா.விசார...

குழுவின் 25வது கூட்டத்தொடரில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம இலங்கை மீதான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றது.

இந்நிலையில், மார்ட்டி அதிசாரி தலை மையிலான நிபுணர் குழுவின் வழிகாட்ட லின் கீழ் இந்த விசாரணைகளை நடத்தும் சன்ட்ரா பெய்டாஸ் தலைமையிலான விசார ணைக் குழுவே இந்த அறிக்கையை சமர் ப்பிக்கவுள்ளது.

இலங்கை மீதான இந்தத் தீர்மான த்துக்கு ஆதரவாக 23 நாடுகளும், எதிராக 12 நாடுகளும் வாக்களித்திருந்த அதே வேளை, இந்த வாக்களிப்பில் 12 நாடுகள் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சூடுபிடிக்கும்...

மகிந்த ராஜபக்ஷவுக்கே கூடுதல் ஆதரவு இருந்து வந்தது.

எனினும் அடுத்த மூன்று தினங்களில் மைத்திரிபால அலை பரவியதை தொடர்ந்து கிராம புறங்களில் ஜனாதிபதிக்கான ஆதரவு சடுதியாக குறைந்து போனது.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேனவுக்காக தேர்தல் பிரசாரங்களோ, துண்டுப் பிரசுரங்களோ விநியோகிக்கப்ப டாத சூழலிலும் இலத்திரனியல் ஊடகங்க ளில் பெரும்பாலான ஊடகங்கள் மகிந்த ராஜ பக்ஷவுக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுத்து வரும் நிலைமையில் இந்த மாற் றம் ஏற்பட்டது.

ஜனாதிபதியின் பிரசாரங்களில் கலந்து கொள்ளும் மக்களில் பெரும்பாலானவர்கள் வெளி பிரதேசங்களில் இருந்து பஸ்களில் அழைத்து வரப்படுபவர்கள் என்பதை மக் கள் அடையாளம் கண்டுகொண்டு விட்ட னர்.

பாரிய பிரசார முன்னெடுப்புகள் இல்லாத நிலைமையிலும் பொது வேட்பாளர் மைத் திரிபால சிறிசேன கலந்து கொள்ளும் பிரசா ரக் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்கின்றனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனா திபதி மக்களுக்கு பெருமளவில் நிவாரணங் களை வழங்கியுள்ள போதிலும் அது எதுவும் ஜனாதிபதிக்கான ஆதரவை வலுப்படுத்த காரணமாக அமையவில்லை என்பதை காண முடிகிறது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு கிடைத்துள்ள இந்த மக்கள் ஆதரவை தக்கவைத்து கொள்ள முடிந்தால், ஜனாதிபதியின் தேர்தல் பிரசார இயந்திரம் வீழ்ச்சியடைந்து தேர்தலில் மைத் திரிபால சிறிசேன, பெருவாரியான வெற் றியை பெறுவார் என்பதைகாணக் கூடியதாக இருப்பதாக ராவய தெரிவித்துள்ளது. (எ-11)

## வடக்கில் சூடு...

கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவில் வடக்குக்கான தனது முத லாவது பிரசாரத்தை ஆரம்பித்துவைத்த மகிந்த அன்று மாலை கிளிநொச்சியிலும் பிர சாரத்தை நடத்திவிட்டு கிழக்கு மாகாணம் சென்றிருந்தார்.

இந்நிலையில், மீண்டும் எதிர்வரும் ஜன வரி 2 ஆம் திகதி வடக்கு வரும் அவர் மன் னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவ ட்டங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தவு ள்ளார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு செல்லும் பொது எதிரணியின் வேட் பாளர் மைத்திரிபால சிறிசேன மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தீவிர பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார் என்று முன் னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள் ளார்.

மைத்திரிபாலவின் வடக்கு விஜயம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## மகிந்தவின் விஞ்...

தெரிவிக்க மறுத்து விட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை மூன்றாம் காலநோக்கு பாதுகாப்பான நாடு மற்றும் பிரகாசமான எதிர்காலம் என்ற பெயரில வெளியிடப்பட உள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் பொது வேட் பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட ப்பட்டுள்ள சில வாக்குறுதிகளை மகிந்த ராஜ பக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப் பதற்காகவே வெளியீடு தாமதமாகியுள்ள தாக கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் கட ந்த 19 ஆம் திகதி கொழும்பு விஹாரமகா தேவி திறந்தவெளி அரங்கில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டார். (எ-11)

## தேர்தலில்...

வரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான மாவை சேனாதிராஜா தெரிவி த்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று 21ஆம் திகதி இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிப் பிராந்திய மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களை அடுத்து, ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியு ள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகின்றோம் என விரைவாக அறிவிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றனர். கிழக்கு மாகாணத்தில் இருந்தும் இது போன்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் எமது மக்கள் அனை வரையும் வாக்களிக்க செய்கின்ற வேலையை உடன் ஆரம்பிக்க வேண்டும் என நாம் அவ ர்களுக்கு பதிலளித்துள்ளோம்.

இந்தத் தேர்தலை பகிஷ்கரிப்பதோ அல் லது வாக்களிக்கத் தவறுவதோ, எங்களு டைய இலக்குகளை நோக்கிய பயணத்தில் பயனுள்ள நடவடிக்கையாக அமையாது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வாக்கு ப்பலத்தை நிரூபிக்கும் வகையில் இந்த ஜனா திபதி தேர்தலில் ஒவ்வொரு அங்கத்தவரும் வேலை செய்ய வேண்டும் எனக் கேட்டுள் ளோம்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அறிக்கை ஒன்றை தயாரித்து வருகின்றது. எமது தலை வர் இன்னும் சில தினங்களில் இந்தியாவில் இருந்து நாடு திரும்பவுள்ளார். அதன் பின் னர் இந்த அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்.

அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ள இந்த அறிவிப்பு, ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவிப்பதாக இருக்கும் என மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளு மன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், வினோநோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சுகாதார அமை ச்சர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (எ-11)

## அம்பாந்தோட்...

நாணயப் பெறுமதியில் சுமார் 2 பில்லி யன் ரூபாய் பெறுமதியான இத்திட்டத்தை சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு தொடக்க த்தில் ஆரம்பிக்கப்பட்டு, ஒன்றரை ஆண்டுக ளுக்குள் நிறைவு செய்யப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

23 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட வுள்ள இந்தத் திட்டத்தின்படி, நெடுஞ்சாலை மற்றும் தொடருந்துப் பாதைகள் இந்த மைய த்தில் நிறைவடையும் வகையில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்து வருவது தொடர்பில் இந்தியா தொடர்ந்து கவலை வெளியிட்டு வரும் நிலையில், இலங்கை அரசாங்கம் இத்திட்ட த்தை மேற்கொள்ளும் பணிகளை சீனா விடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BEACON யாழ்நகர்

**A/L 2015 DAY CLASS** மிகவிரைவில் ஆரம்பம்

வணிகவியல் பிரிவுக்கான அனுமதிகளை இன்றுமுதல் பெறலாம்...

கணக்கீடு: R.சுகிர்தன் (B.COM)
பொருளியல்:K. பிரதீபன் (B.B.A)
வணிககல்வி: உங்கள் ஆசிரியர்

*அனுமதிகளை உறுதி செய்யவும்*
-BEACON

(C-9447)

# BEACON Tech-City தொழில்நுட்ப நகரம்

வெலிங்டன் சந்தி யாழ்நகர்

## தொழில்நுட்பப் பிரிவுக்கு

வட மாகாணத்தில் தனித்துவமான ஒரே ஒரு நிறுவனத்தின் அனுமதிகள் இன்றுமுதல் வழங்கப்படும். தரமானவர்களுடன் இணைந்து தரமானவர்களாவதற்கு அனுமதிகளை உறுதிசெய்யவும்.

BEACON Tech-City

ஆரம்பம்:
**24.12.2014 காலை 8 மணி**

(C-9447)

# A/L 2017

கலை - வணிகவியல் பிரிவுகள்

ஆரம்பம்:
03 . 01 . 2015
காலை 9 மணி

BEACON
வெலிங்டன் சந்தி, யாழ்நகர்

(C-9447)

# NEW SCIENCE WORLD

Navalar Road - Brown road Junction, Jaffna.
Web : www.physicsocean.com
E-mail : info@physicsocean.com
Telephone : 077 336 4055

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

## G.C.E(A/L) 2017 SCIENCE STREAM

### தமிழ்மொழி மூலம்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன்<br>திரு. R. குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன்<br>திரு. V. உமாசங்கர்<br>(கொழும்பு முன்னணி உயிரியல் ஆசிரியர்) |

### English Medium

| | |
|---|---|
| Physics | Mr. R.Kumaran |
| Chemistry | Mr. Dias |
| Biology | Mr. V. Umashanger<br>(Leading Biology Teacher- Colombo) |

ஆரம்பம் :- 23.12.2014 செவ்வாய் காலை 07.00மணி

அனைத்து மாணவர்களும் அனுமதிகளை 22.12.2014 இன்று காலை 10.00 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம்

(C-9446)

# Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-9443)

# NEW SCIENCE HALL



கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

## G.C.E. A/L 2017

## கணித, உயிரியல் பிரிவு

### தமிழ் மொழி மூலம்

| PHYSICS | CHEMISTRY |
|---|---|
| திரு.S.சோதிலிங்கம்<br>திரு.N.கபிலன்<br>திரு.K.செல்வன்<br>திரு.G.பிரபா | திரு.K.சிவத்திரன்<br>திரு.N.மகேஸ்வரன்<br>திரு.G.BENO<br>திரு.T.சுசாந்தன்<br>திரு.J.றஞ்சித்காந் |

| BIOLOGY | COM.MATHS |
|---|---|
| திரு.T.தம்பிராஜா<br>**வழமையான ஆசிரியருடன்**<br>திரு.T.கெங்காதரன் | திரு.S.செந்தில்ராஜ்<br>திரு.P.செந்தில்நாதன்<br>திரு.S.சிவகரன் |

### ENGLISH MEDIUM

| PHYSICS | CHEMISTRY |
|---|---|
| Mr.S.SOTHILINGAM<br>Mr.K.SELVAN | Mr.N.MAHESWARAN<br>Mr.G.BENO |

| BIOLOGY | COM.MATHS |
|---|---|
| **OUR USUAL TEACHER**<br>Mr.T.THAMBIRAJAH<br>Mr.R.KUGANANTHAN | Mr.S.SIVAKARAN |

**தொழில்நுட்பவியல் கற்கைநெறி**

- பொறியியற் தொழிநுட்பவியல்
- விஞ்ஞானம் தொழிநுட்பவியல்
- உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல்

**ஆரம்பம் :- இன்று 22.12.2014 திங்கள் காலை 9.30**

(C-9443)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.